விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 18 புதன்கிழமை (04.11.2009), தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 320




# எதிர்க் கட்சிகளை உள்ளடக்கிய பொதுக் கூட்டமைப்பு உதயம்!

## 20 கட்சிகள் உள்ளடக்கம்

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், தேர்தலில் அரசை எதிர்கொண்டு முறியடிக்கும் நோக்கில் ஐக்கியதேசியக்கட்சி தலைமையில் எதிர்க்கட்சிகள் இணைந்து ஐக்கிய தேசிய முன்னணி என்ற புதிய கூட்டணியை அமைத்துள்ளன.** (14ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றுவரை 50ஆயிரத்து 669 பேர் யாழுக்கு அழைத்து வரப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்புட்டுள்ளவர்களில் யாழ். மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட ஆயிரத்து 109 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 627 பேர் நேற்று யாழ்ப்பாணத் திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இத் தகவலை யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். அத்துடன் வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் யாழ். மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட 50 ஆயிரத்து 669 பேர் இது வரை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்பட்டதாகவும் மேலும் 7ஆயிரம் பேர் வரை அங்கு இருப்பதாக மதிப்பிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் யாழ். மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட ஆயிரத்து 109 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 627 பேர் (14ஆம் பக்கம் பார்க்க)

## பயணக் கட்டுப்பாடுகளை நீக்குமாறு யாழிலிருந்து ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயணக்கட்டுப்பாடுகளை நீக்குமாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அதன் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் வருவோர் கப்பல் மூலமும் விமான மூலம் வருவோர் விமான மூலமும் மாத்திரமே கொழும்புக்கு திரும்பிச் செல்லலாம் என்ற தற்போது அமுலிலுள்ள கொள்கை மக்களுக்கு பாரிய அசௌகரியத்தை (14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் உதவிச் செயலாளர் ஹோம்ஸ் இலங்கை வருகிறார்?



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உதவி செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் மீண்டும் இம்மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க விடுத்த அழைப்பை (14ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

- சிவல்புரி சிங்காரம் எழுதும் இராகு கேது மாற்றம் உங்களுக்கு எப்படி?
- நலன்புரி முகாம் மாணவர்களின் தரம்–5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்.
- க.பொ.த. (சா/த) பரீட்சை கணித பாட மாதிரி வினாத் தாள்.

## போர் குற்றம் குறித்த விசாரணைக்கு இலங்கை எதிர்ப்பு; அமெ. மௌனம்

(கொழும்பு)

இராணுவ கூட்டுப்படை பிரதம அதிகாரி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் மீது எழுந்துள்ள போர்க் குற்றவிசாரணைகள் குறித்த தகவல்கள் தொடர்பில் அமெரிக்கா மௌனம் காப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கை படை அதிகாரிகள் மீதான போர்க் குற்ற விசாரணைகள் தொடர்பாக எழுந்துள்ள தகவல்கள் குறித்து நேற்றுவரை அமெரிக்கா கருத்து எதனையும் கூறவில்லை.

இது தொடர்பில் தனது எதிர்ப்பை இலங்கை அரசு அமெரிக்க தூதுவரிடம் தெரிவித்திருந்தது. ஆனால் அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்பு திணைக்களம் அதனை மறுக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவே இல்லை என திணைக்கள பேச்சாளர் மற் சான்டலர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு பாதுகாப்பு திணைக்களத் தின் விசாரணைகள் தொடர்பாக தனக்கு அனுபவம் இல்லை என அமெரிக்காவின் வெளி விவகார திணைக்கள பேச்சாளர் இயன் கெலியும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே (14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நால்வரும் நீதிமன்றத்தால் நேற்று விடுதலை

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கில் நால்வரும் நேற்று கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

கொழும்பு பிரதம நீதவான் நிஷாந்த ஹப்பு ஆராச்சி முன்னிலையில் இந்த வழக்கு நேற்று அழைக்கப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கை வாபஸ் பெறுவதற்கு இரகசிய பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

எஸ்.கஜேந்திரன், எஸ்.ஜெயானந்த மூர்த்தி, கே.சிவாஜிலிங்கம், பி.அரியநேந்திரன் ஆகிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். இவர்களுக்கு எதிராக பொலிஸ்மா அதிபரினால் இரகசியப் பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றை அடுத்து விசாரணைகளை இரகசியப் பொலிஸார் (14ஆம் பக்கம் பார்க்க)

## இ.போ.ச. சாரதி மற்றும் காப்பாளர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை

### நாளை கோண்டாவில் சாலையில் நடக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்து சபையில் சாரதி மற்றும் காப்பாளர்கள் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை நாளை 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கோண்டாவில் சாலையில் நடைபெற இருப்பதால் மேற்படி பதவிகளுக்கு இது வரையில் விண்ணப்பித்திருப்பவர்களை இந் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டுள்ளார்.

இந் நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு கொழும்பிலிருந்து போக்குவரத்து அமைச்சு சார்ந்த உயரதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டு உரிய நியமனங் (14ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சிறுவர் பராமரிப்பு நிலையம் நெடுந்தீவில் திறந்து வைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமூக பாதுகாப்பு மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையக் கட்டடத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

நேற்று முன்தினம் நெடுந்தீவுக்கு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா றோமன் கத்தோலிக்கக் கல்லூரி மாணவிகளின் பாண்ட் வாத்திய குழுவின் இசையுடன் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் அங்குள்ள சமூக பாதுகாப்பு மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இப் பகுதிக்கான உதவி அரசாங்க அதிபர் பிரிவை பிரதேச செயலகப் பிரிவாகத் தரம் உயர்த்த தான் கவனத்தில் கொண்டுள்ளதாகவும் இதே போன்று குடாநாட்டில் மேலும் மூன்று உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளைத் தரம் உயர்த்த வேண்டும் எனத் தெரிவித்ததுடன்,

அங்குள்ள அரச நிர்வாக அலுவலகங்களில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நீக்கி, அரசின் நிர்வாக நடவடிக்கைகளைச் சிறப்பாக முன்னெடுக்க வேண்டும் என்ற உதவி அரசாங்க அதிபரின் கோரிக்கையையும் தான் கவனத்தில் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் உரை நிகழ்த்தும் போது, பாதிக்கப்பட்ட பல்வேறு தரப்பினர்களுக்காகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக பாதுகாப்புப் பணிகள் குறித்துக் குறிப்பிட்டதனைத் தான் கவனத்தில் கொண்டுள்ளதாகவும் அவை தொடர்ந்து சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே தனது விருப்பம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன், அப் பிரதேசப் பாதுகாப்புப் பொறுப்பதிகாரி மற்றும் கடற்படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ச)

# பிரதேச வைத்தியசாலைகளின் கட்டிடங்களின் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு கட்டிடம், மருந்துக் களஞ்சியம், நோயாளர் தங்கு விடுதி ஆகிய கட்டிடங்களின் திறப்பு விழா நாளை மறுதினம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, நெக்கொட் திட்டப்பணிப்பாளர் ரி.லங்காநேசன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.இ.ஞானஜோதி, சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், யாழ்ப்பாணம் கட்டிட திணைக்கள பிரதம பொறியியலாளர் க.குகநேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-14)

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக் கட்டிடத் திறப்பு விழா எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலர் ஆ.சிவசுவாமி, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஏ.இ.ஞானசோதி ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கட்டிடத் திணைக்கள பிரதம செயலர் சி.சத்தியசீலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-14)

இளவாலை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு புதிய கட்டிட திறப்பு விழா எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலர் இ.இரவீந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.இ.ஞானசோதி, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.இராதையன், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டி.ஜெயக்குமாரன், யாழ்ப்பாணம் கட்டிடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் க.குகநேசன், தெல்லிப்பழை பிரதேச செயலர் சு.முரளிதரன், சண்டிப்பாய் பிரதேச செயலர் ம.ஜெசூ ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-14)

# இலங்கை அகதிகளை ஏற்றிச் சென்ற மற்றும் ஒரு படகைக் காணவில்லை

(கொழும்பு)

இலங்கை அகதிகளை ஏற்றிச் சென்ற மற்றும் ஒரு படகு அவுஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவிற்கு அருகில் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

59 பேருடன் சென்ற இந்தப் படகுடன் வெளித்தொடர்புகள் துண்டிக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நீரில் மூழ்கிய 40 பேருடன் சென்ற படகிற்கு பின்னால் இந்தப் படகு சென்றதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இந்தத் தகவல் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இதேவேளை வடமேற்கு அவுஸ்திரேலியாவின் ஆழ் கடற்பரப்பில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 20க்கு மேற்பட்டவர்கள் மரணமாகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

40 பேரை ஏற்றிக் கொண்டு சென்ற இப்படகில் ஏற்பட்ட பழுதையடுத்து படகு மூழ்க ஆரம்பித்தது. எண்ணெய் கப்பல் ஒன்றும் தாய்வான் மீன்பிடிக் கப்பல் ஒன்றும் மூழ்கும் படகில் இருந்தவர்களைக் காப்பாற்ற எடுத்த முயற்சியில் 17 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவ் வருடம் 1700 புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றி வந்த, இவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையர்களும் ஆப்கானிஸ்தானியர்களுமாவர்.

படகுகளைப் போன்ற ஒன்று தானா இது என இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# இணையத்தளம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின்புதிய இணையத்தளம்நாளை 5ஆம்திகதி வியாழக்கிழமைபி.ப 2.00மணிக்கு வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (ச)


## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வெளிவாரிப் பரீட்சைகள்-2008

1. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி-II-2006 & 2007 (வெளிவாரி)

**மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்**

கலைமாணி பகுதி-II-2004&2005 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 25.11.2009 (புதன்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா. 200/=ஆகும். யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினை பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப் பட்ட ரூபா.100/= க்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா.40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
03.11.2009

(C-3642)


# கண்ணிவெடி வெடித்ததில் படைத்தரப்பில் ஒருவர் பலி

(கொழும்பு)

கண்ணிவெடிகளைச் செயலிழக்கச் செய்து கொண்டிருந்த போது நிலக்கண்ணி வெடி வெடித்ததில் படைத்தரப்பினைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் ஒரு படை அதிகாரியும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் மட்டக்களப்பு கல்லடியில் கிளைமோர் கண்ணி, நிலக்கண்ணி, அமுக்ககண்ணி, மோட்டார்எறிகணைக் கண்ணி ஆகியவற்றை செயலிழக்கச் செய்யும்நடவடிக்கையில்ஈடுபட்ட போதுநிலக்கண்ணி வெடித்துள்ளது.

இதில் லான்ஸ் கோப்ரல் தர படையதிகாரி சம்பவ இடத்தில் கொல்லப்பட்டுள்ளார். மேலும் ஒரு படை அதிகாரியும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் மட்டக்களப்பு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர் லான்ஸ் கோப்ரல் லலித் குமார என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச-3)


## ஒத்துமாறல்

திருகோணமலை மூதூரில் சமுர்த்தி முகாமையாளராக கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

விரும்பமுடையவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி: 071 8099626

(3881)

## வீடு வாடகைக்கு

*யாழ்ப்பாணம், நாவலர் வீதிப்பகுதியில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிற்கு உகந்த வகையில் வாகனத் தரிப்பிட வசதி உள்ளிட்ட சகல வசதிகளுடனும் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. தேவைப்படுபவர்கள் மாலை 3 மணிக்குப்பின் தொடர்பு கொள்ளவும்.*

தொடர்பிற்கு:
ப.விஜயகுமார்
இல.40, கடைச்சாமி லேன்,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(3880)


# வீரமணிஐயர் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 9 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இயல்இசைவாரிதி ந.வீரமணி ஐயரின் நினைவுப் பேருரை நாளை மாலை 3 மணிக்குப் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறும்.

'தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்ட தமிழர் அழகியல்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (ச)




கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெற்ற சர்வதேச முதியோர் தின விழாவில் லயன் செல்லத்துரை உரையாற்றுவதையும், லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஆளுநர் லயன் லக்ஷ்மன் விஜயசிங்க, முதியோர் இல்ல அத்தியட்சகர் இராசலிங்கத்திடம் உதவிப் பொருள்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## மூத்தோர் பெருமை

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்குப் பின் இளவரசன் பட்டத்திற்கு வந்தான்.

இந்த இளவரசனுக்கு ஒரு குணம்... அதாவது அவனுக்கு வயதானவர்களைக் கண்டால் பிடிக்காது.

இளைஞர்களின் வளர்ச்சிக்குப் பெரியவர்கள் இடையூறாக இருப்பதாக நினைத்தான்.

பட்டத்திற்கு வந்ததும் ஓர் உத்தரவிட்டான்.

“இந்தத் தேசத்தில் பெரியவர்கள் யாரும் இருக்கக் கூடாது. அவர்களை எல்லாம் நாடு கடத்தி விட வேண்டும். இந்த உத்தரவை மீறி யாராவது வயதானவர்களைத் தங்கள் வீட்டில் வைத்திருப்பதாகத் தெரிந்தால் அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்” என்று உத்தரவிட்டான்.

எல்லோரும் இந்த உத்தரவுக்குப் பயந்து அவரவர்களின் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி அனைவரையும் வேறு தேசத்திற்கு அனுப்பிவைத்து விட்டார்கள்.

இளைஞர்களை மட்டும் வைத்துக் கொண்டு இந்த இளவரசன் ஆட்சி நடத்திக்கொண்டிருந்தான்.

இப்படி இருந்த காலத்தில் அந்நிய நாட்டிலிருந்து ஒரு வித்தைக்காரன் வந்தான் .

“என்னுடன் போட்டியிடக் கூடிய புத்திசாலிகள்யாராவது இந்தத்தேசத்தில் உண்டா?” என்று அவன் சவால்விட்டான்.

இது இளவரசனின் காதுக்கு எட்டியது. உடனே அவன் அந்த வித்தைக்காரனை அழைத்து வரச்சொன்னான்.

வித்தைக்காரன் வந்ததும் “என்ன உன் சவால்? அதைச் சொல்” என்று கேட்டான்.

அதற்கு வித்தைக்காரன் ‘‘இளவரசே வேறு ஒன்றுமில்லை... சாம்பலைக் கயிறாகத் திரிக்க வேண்டும். இது ஒரு போட்டி. மற்றொரு போட்டி–இதோ இந்தச் சங்கில் நூலைக் கோர்த்துத் தர வேண்டும். அவ்வளவு தான் !” என்றான்.

“இளவரசன் யோசித்தான். இரண்டுமே சாத்தியமில்லாத விடயம்” என்பதை உணர்ந்தான்.

இளசரசனுக்கு அவமானமாகி விட்டது.

எனவே ‘‘இந்த வித்தைக்காரனின் சவாலை ஏற்றுக் கொள்வதற்கு இந்தத் தேசத்தில் இளைஞர்கள் யாரும் கிடையாதா?” என்று கேட்டான்.

அதை ஊர் முழுவதும் அறிவிக்கச் சொன்னான்.

ஒரே ஒரு இளைஞன் மட்டும் வந்தான். இளைஞன் ஆச்சரியத்துடன் “எங்கே சாம்பலைக் கயிறாகத் திரித்துக் கொண்டு வா பார்க்கலாம்” என்றான்.

இளைஞன் “கொஞ்சம் இருங்கள்” என்று சொல்லிவிட்டு அடுத்த அறைக்குச் சென்றான். சிறிது நேரத்தில் ஒரு தாம்பாழத்தட்டோடு திரும்பி வந்தான்.

அந்தத் தட்டில் சாம்பலில் திரிக்கப்பட்ட கயிறு இருந்தது!

அதைப் பார்த்து எல்லோரும் வியப்படைந்தார்கள். சரி... அடுத்து சங்கில் நூலைக்கோர்க்க வேண்டும்.

இளைஞன் மறுபடியும் “கொஞ்சம் இருங்கள்” என்று கூறி விட்டு சென்றான். சிறிது நேரம் கழித்து திரும்பி வந்தான்.

அவன் கையில் நூலால் கோர்க்கப்பட்ட சங்கு இருந்தது.

அந்நிய தேசத்திலிருந்து வந்தவன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு தோல்வியை ஒப்புக்கொண்டு திரும்பிப் போய் விட்டான். இளவரசன் இந்த இளைஞனைப் பாராட்டினான்.

அதன்பின் இதையெல்லாம் எப்படிச் செய்தாய்? என்று கேட்டான்.

“இளவரசே ... அது ஒன்றுமில்லை. ஒரு கயிறுத்துண்டை வெட்டியெடுத்து தாம்பாழத்தட்டில் வைத்து கொளுத்தினேன். அது சாம்பலானதும் அசையாமல் மெதுவாக எடுத்துக் கொண்டு வந்து விட்டேன்” என்றான் இளைஞன்...

சங்கில் நூலை நுழைத்தது எப்படி? என்று இளவரசன் கேட்டான். அதற்கு இளைஞன் “ஓர் எறும்பைப்பிடித்து அதன் உடம்பில் ஒரு மெல்லிய நூலைக்கட்டினேன். அதைச் சங்கின் ஒரு பக்கமாக விட்டேன். அடுத்த பக்கம் ஒரு சர்க்கரைத் துண்டை வைத்தேன். எறும்பு நூலை இழுத்துக் கொண்டு இந்தப்பக்கம் வந்து விட்டது” என்று பதிலளித்தான்.

‘‘இந்தத் தந்திரம் உனக்கு எப்படித் தெரியும்?’’ என்று வினவினான் இளவரசன்.

“இளவரசே என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்களுக்குத் தெரியாமல் எங்கள் அப்பா – அம்மாவையும் தாத்தாவையும் எங்கள் வீட்டிலேயே மறைத்து வைத்திருந்தேன். எங்கள் தாத்தா தான் இந்த யோசனையைச் சொன்னார்” என்றான் இளைஞன்.

இளவரசன் யோசனை செய்தான். அவனுக்குத் தன் தவறு புரிந்தது. நாடு கடத்திய பெரியவர்களை எல்லாம் மறுபடியும் மரியாதையுடன் திருப்பி அழைத்துக் கொண்டு வந்தான். அவர்களின் அனுபவ அறிவுக்கு மதிப்புக் கொடுக்க ஆரம்பித்தான்.

பெரியவர்களை அலட்சியப்படுத்தக்கூடாது என்பது இந்தக் கதையின் கருத்து.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை கல்வி நிர்வாக சேவையின்

# முதலாம் வகுப்புக்கு நாடளாவிய ரீதியில் 300 பேர் பதவி உயர்வு பெறவுள்ளனர்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவை முதலாம் வகுப்பிற்கு நாடளாவிய ரீதியில் சுமார் 300 பேர் பதவி உயர்வு பெறவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் எதிர்வரும் 07 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்வியமைச்சில் நடைபெறவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் கே. முகம்மட் தம்பி தெரிவித்தார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு இரண்டில் 10 வருட கால திருப்திகரமான சேவையை நிறைவு செய்தவர்கள், பதவி உயர்வுக் கடிதத்தினைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

கடந்த 5 மாதங்கள் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையிலிருந்து இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே அஞ்சலிடப் பட்டுள்ளதாகவும் ஜனாப் முகம்மட் தம்பி குறிப்பிட்டார்.

தபால் தாமதம் காரணமாக அழைப்புக் கடிதம் கிடைக்காதவர்கள் அல்லது இது தொடர்பான மேலதிக விபரம் தேவைப்பட்டவர்கள் ஆகியோர் கல்வியமைச்சின் கல்விச் சேவைகள் ஸ்தாபனப்பிரிவு உதவிச் செயலாளரையோ அல்லது மேலதிக செயலாளரையோ 011 2787330 இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைவிட இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு மூன்று பதவிக்கு இலங்கை அதிபர் சேவை முதலாம் வகுப்பு அதிபர்கள் 100 பேர் பதவி உயர்வு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# நாவலர் குருபூசைத் தினத்தை முன்னிட்ட கட்டுரை - பேச்சு போட்டிகள்

வலி. கிழக்கு சைவ சமய அருள் நெறி மன்றத்தாரால் எதிர்வரும் டிசம்பர் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசை தின விழாவையொட்டி கட்டுரை பேச்சுப் போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டியில் பாடசாலை மாணவர்கள் அனைவரும் பங்குபற்றலாம் என்றும், விண்ணப்ப பத்திரங்கள் ‘‘சைவ சமய அருள் நெறி மன்றம் வீரபத்திர கோவிலடி, கோப்பாய் தெற்கு” என்னும் விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் வலி கிழக்கு சைவ நெறி மன்றத் தலைவர் சோ. சி. பிரணதார்த்தி ஹர குருக்கள் தெரிவித்துள்ளார். (ஓ)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்ட முன்பள்ளி மாணவர்களின் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மார்தத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் பிரதான நூலகம் மற்றும் நுணாவில், மீசாலை கிளை நூலகம் ஆகியன இணைந்து ‘‘மலரும் மொட்டுக்கள்” திட்டத்தின் கீழ் சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கிடையில் எழுத்தறிவுகளை நடத்தியுள்ளன.

இதில் மத்தியஸ்தர்களாக நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய ஆசிரியர்களான திருமதி. ஞா. சிவபாலன், திருமதி ந. நரேந்திரன் மற்றும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் செல்வி. இ. ஜீவிதா ஆகியோர் கட மையாற்றினர்.

இவர்களால் வெளியிடப்பட்ட முடிபுகளின் விபரம் வருமாறு,

**100 புள்ளிகளைப் பெற்றவர்கள்**

**ஸ்ரீ முருகன் முன்பள்ளி**
உ. யேதவரதன், ஜெ. பிந்துஷா, இ. ஹம்சிகா.

**தென் இந்திய திருச்சபை முன்பள்ளி**
ம. நித்திகா

**நாமகள் முன்பள்ளி**
ஸ்ரீ. வனோஜா

**கலைமகள் முன்பள்ளி**
சி. சயானன், செ. ஜதுசன், பா. வினோஜன்.

**100 - 90 இடையில் புள்ளிகள் பெற்றவர்கள்**

**நாமகள் முன்பள்ளி**
சு. ஜனப்பிரியன்.

**நாவலர் முன்பள்ளி**
வா. சாய்ராம், அ. அபிநயா, ச. தசானி.

**வீனஸ் முன்பள்ளி**
ரா. கோபிதன், ரீ. கம்சாயினி, ஜீ. றவன்சியாமேரி.

**குழந்தையேசு முன்பள்ளி**
பூ. பஞ்சிகா, ம. டிலோஜினி

**அம்பாள் முன்பள்ளி** .
சு. டிலக்சன்

இவர்களுக்கான பரிசில்கள் வாசிப்பு மாத நிறைவுநாள் நிகழ்வில் வழங்கப்படும் என்றும் இதற்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-29)

# இராசி பலன்

04.11.2009
(ஐப்பசி 18 புதன்கிழமை)
துதியை முன்னிரவு 11.26 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 7.38 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை
கார்த்திகை விரதம், அமிர்த சித்தம்

| | |
|---|---|
| மேடம் | பொருள் விரயம், கௌரவக் குறைவு, காரிய தாமதம், ரோக நிலை. |
| இடபம் | புதிய பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி, சயன சுகம், விருந்துபசாரம். |
| மிதுனம் | பிதா சிந்தை, உணர்ச்சி வசப்படல், பணவிரயம், இடமாற்றம். |
| கடகம் | குடும்ப மகிழ்ச்சி, பெருமையடைதல், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | தொழில் விருத்தி, இனிய சம்பவம், ஆரோக்கியம், பிறர் உதவி. |
| கன்னி | ஆன்றோர் சந்திப்பு, உடல் உழைப்பு, புதிய முயற்சி, அச்சமான நிலை. |
| துலாம் | எதிர்பாராத அச்சம், போசன சுகம், உஷ்ண வியாதி, பிறருக்கு உதவுதல். |
| விருச்சிகம் | வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை, நல்ல செய்தி. |
| தனுசு | பணவருவாய், சுகவாழ்வு, திடீர் பயணம், சத்துரு ஜெயம். |
| மகரம் | தாழ்ந்த சுபாவம், சிறுவியாதி, வியாபார நன்மை, போசன சுகக்குறைவு. |
| கும்பம் | பயந்த சுபாவம், கல்வியில் மேன்மை, முயற்சி தாமதம், சுபசெலவு. |
| மீனம் | சகோதர உதவி, இனிய நிகழ்வு, வாக்குமேன்மை, பொருள் சேர்க்கை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 40 |
| தக்காளி | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 60 | 80 | 70 |
| பூசணி | 20 | 30 | 30 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 85 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 70 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 50 | 40 |
| பயிற்றங்காய் | 70 | 100 | 60 |
| லீக்ஸ் | 110 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 180 | 220 | 140 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 240 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# சிறப்பான பந்து பரிமாற்றத்தின் மூலம்

# கலைமதி அணியை தோற்கடித்து சம்பியனை கைப்பற்றியது டைமன்ஸ்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி லிக்கில் உள்ள உதைபந்தாட்ட அணிகளுக்கிடையே அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடாத்தி வந்த உதைபந்தாட்ச்சுற்றுப்போட்டியில்வதிரிடைமன்ஸ்விளையாட்டுக்கழகம் சம்பியனை கைப்பற்றியது.

வடமராட்சி லிக் உதைபந்தாட்ட அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இவ் இறுதிச் சுற்றுப் போட்டியில் நவிண்டில் கலைமதி அணி, வதிரி டைமன்ஸ் அணி ஆகியன மோதிக் கொண்டன.

இவ் இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகிய நிமிடத்தில் இருந்தே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த ரசிகர்களை இருக்கையின் நுனிக்கே கூட்டிச் சென்றது.



கலைமதி அணியினருக்கு ஆரம்பத்திலே கோல் போடுவதற்கான வர்ய்ப்புக்கள் கிடைத்ததும் டைமன்ஸ் அணியினர் அதனை தடுத்து நிறுத்திய வேளையிலும் கலைமதி அணியின் வீரர் சிவராஜ்க்கு 25 ஆவது நிமிடத்தில் ஓர் வாய்ப்பு கிடைத்தது. இதனை அவர் சாதூரியமாக பயன்படுத்தி கோல் ஒன்றைப் போட்டு அசத்தினார். இதனால் டைமன்ஸ் அணி நிலை குலைந்து தடுமாறியது.

இதனால் அதிர்ச்சியடைந்த டைமன்ஸ் அணியினர் தமது அணித்தலைவரின் வழிநடத்தலில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தொடங்கினர்.

கலைமதி அணி கோல் இறக்கியதன் பின்னரான 4 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் அணியின் வீரர் அரவிந்தனுக்கு ஓர் அருமையான வாய்ப்பு கிடைத்தது. இதனைப் பயன்படுத்தி கோல் ஒன்றைப் போட்டு ரசிகர்களை பிரமிப்படையச் செய்தார்.

இதனால் 1:1 என்ற கோல் கணக்கில் முதலாவது பாதியாட்டம் 5 நிமிட இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளை முடிந்ததும் இரண்டாவது பாதியாட்டத்திற்காக போட்டிகள் ஆரம்பிக்கப் பட்ட போது கலைமதி அணியினர் தமது அணியை பலப்படுத்த முற்பட்டனர். இவ் வேளையிலும் கலைமதி அணியின் முதற்கள வீரர்களின் ஆட்டத்தை சிதறடித்த டைமன்ஸ் அணி வீரர்களின் நுட்பமான பந்து பரிமாற்றத்தினால் டைமன்ஸ் அணி வீரர் அரவிந்தன் 49 ஆவது நிமிடத்தில் மற்றுமோர் கோல் ஒன்றை போட்டு தமது ரசிகர்களை மகிழ்ச்சியடையச் செய்தார்.

இதேவேளை ஆட்டம் தொடர்ந்து கொண்டிருந்த நேரம் இவ் அணியின் விமல்ராஜ் 52 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலைப் போட்டு தமது அணியினை வலுப்படுத்தியிருந்தனர்.

எனினும் கலைமதி அணியினர் போட்டி முடியும் வரை கோல்களைப் போட எத்தணித்தும் அது டைமன்ஸ் அணி வீரர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதனால் டைமன்ஸ் அணி கலைமதி அணியினை தோற்கடித்து 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி சம்பியனை கைப்பற்றியது. (ஓ-7)

## தொழில் நுட்பப் பரிமாற்றப் பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் கீழ் தொழிற்துறைத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட பனம் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு உணவுப் பொருட்களை தயாரிப்பதற்கான தொழில் நுட்பப் பரிமாற்றப் பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர். ரி. ஜெயசீலன் தலைமையில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கணக்காளர் கண்டி காரைநகரில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக தொழிற்துறைத் திணைக்கள மாவட்ட அலுவலர் பி. ராகவன், பனை அபிவிருத்திச் சபையின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சி. புவனேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-7)

## கிராமியக் கலைவிழாவில் கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் கிராமியக் கலைவிழாவில் அவிசாவளை பாணந்துறையைச் சேர்ந்த தென்னிலங்கைத் திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும் சாவகச்சேரி, நல்லூர், இளவாலை, இணுவில், குருநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த யாழ். மாவட்டக் கலைஞர்கள் வழங்கும் கிராமிய நடனங்கள் எதிர்வரும் 7,8,11 ஆம் திகதிகளில் பிற்பகல் 5 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றத்தினர் அழைக்கின்றனர். (ஓ-6)

## திறப்புவிழா

(வடமராட்சி)

பருத்தித்துறை தும்பளையில் மாதர் உற்பத்தி நிலையம் ஒன்று இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது.

இத்திறப்பு விழாவுக்கு நெக்டொப் நிறுவன பணிப்பாளர் குரூஸ், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் மற்றும் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-10)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் மாதாந்தக் கருத்தரங்குத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அரசறிவியல் விரிவுரை மண்டபம் 308 இல் கலாநிதி எஸ். சந்திரசேகரம் "ஜனநாயகமும் பொருளாதார அபிவிருத்தியும் - ஒரு பார்வை" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவியல் ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ)

## தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் ஆதரவில் யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில் நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு அளவெட்டி கணேசா விளையாட்டுக்கழகமும் எதிர் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகமும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதுமலை புவனேஸ்வரியம்பாள் விளையாட்டுக்கழகமும் எதிர் மயிலிட்டி நியூகிட் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ஓ-4)

## மூன்றாம் தவணைப் பரீட்சைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயப் பாடசாலைகளில் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான 3 ஆம் தவணைப் பரீட்சைகள் இன்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

இப் பரீட்சையின் பிரதான பாடங்களுக்கான வினாத்தாள்களை பரீட்சை தினமன்று காலையில் தமக்குரிய கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## மாகாண மட்ட ஆங்கில தின எழுத்துப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட ஆங்கில தின எழுத்துப் போட்டிகள் யாவும் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)




## "இரட்டையர்" நாடகப் பிரதி வழங்கும் வைபவம்

(குருநகர்)

இளைஞர் கலைக்கழக ஆதரவில் இயங்கும் சிறுவர் கழகத்தின் 4 ஆவது அணியினரால் வேதாகம கருத்துக்களை மையமாக வைத்து இரட்டையர் என்னும் நாடகப்பிரதி வழங்கும் வைபவம் நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கழகப் பணிமனையில் தலைவர் அ. கனிஸ்ரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்திற்கு கழக ஊக்குவிப்பாளர்களான யாழ் மாநகராட்சி மன்ற உறுப்பினர் பிளேவியன் கிறேசியன், குருநகர் சனசமூக நிலையத் தலைவர் அ. யேசுதாசன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஜே / 71 சி.எம்.றெல்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். நாடக முதற்பிரதியினை கலாபூஷணம் வி.ஜே.கொன்ஸன்ரைன் வழங்கவுள்ளார். (ஓ-39)



ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் அண்மையில் சர்வதேச வைத்தியக் குழுக்களால் அதி நவீன அவசர சிகிச்சை உபகரணங்களும் அதி நவீன பல் சிகிச்சை உபகரணங்களும் அன்பளிப்பு செய்யப்பட்டு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சர்வதேச வைத்திய குழுக்களைச் சார்ந்த றொணி வூட்யாட் பல் வைத்தியப் பிரிவை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ. கேதீஸ்வரன், தேசிய பிரதிநிதி செல்வி நமணி பெரேரா ஆகியோர் நிற்பதையும் யாழ். பிராந்திய பல் வைத்திய அதிகாரி டாக்டர் வி. ஆர் டேவிட் பல் நோயாளரை சிகிச்சைக்காகப் பார்வையிடுவதையும் அருகில் ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் பி. அருணா உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த எஸ். சிவராசா ஆகியோர் நிற்பதையும் அவசர சிகிச்சை உபகரணங்கள் இயங்க வைப்பதையும் படங்களில் காணலாம்.

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்

# 27.10.2009 முதல் 08.06.2011 வரை



## தனுசு

**மூலம், பூராடம் , உத்தராடம் முதலாம் பாதம் வரை**

இரக்க சிந்தனையால் எல்லோர் மனதிலும் இடம் பிடிக்கும் தனுசு ராசி நேயர்களே!

உள்ளத்தில் அன்பு செலுத்தினால் உலகத்தை வசமாக்கிக்கொள்ளலாம் என்ற தத்துவத்தை உணர்ந்திருப்பவர்கள் நீங்கள். தெய்வப் பற்றும் , தேசப்பற்றும் இணைந்தேயிருக்கும். தடைக்கற்கள் எத்தனை வந்தாலும் அதைத் தாண்டிச் செல்லக்கூடிய ஆற்றல் உங்க ளுக்கு உண்டு. தவறைத் தட்டிக்கேட்க தய ங்க மாட்டீர்கள்.

சேமிப்பதை அக்கறையாகக் கொண்டாலும், செலவழிக்கயோசிக்க மாட்டீர்கள். மதிவளம் உங்களிடம் இருப்பதால் மக்கள் மத்தியில் எளிதில் செல்வாக்கைப் பெறுகிறீர்கள்.

ஓய்வு என்ற சொல்லை ஒதுக்கி விட வேண்டுமென்று சொல்வீர்கள். உறவினர்கள் ஆதரவு உங்களுக்கு குறைந்தாலும் நண்பர்களின் ஆதரவு உங்கள் வாழ்க்கைப் பாதையை வளமாக்கிக் கொடுக்கும்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த குணங்களைப் பெற்ற உங்களுக்கு உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கப் போகும் ராகுவாலும், சப்தமஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகும் கேதுவாலும் எப்படிப்பட்ட மாற்றங்கள் வரப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வைக்கும் ஜென்மராகு!**

**எதையும் யோசித்துச் செய்யவைக்கும் ஏழாமிடத்து கேது!**

இதுவரை மகர ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும் , கடகராசியில் சஞ்சரித்துவந்த கேதுவும் தனது வான்வெளிப்பயணத்தில் 27. 10. 2009 அன்று பின்னோக்கிச்சென்று பிரச்சினைகள் தீர வழிகாட்டப்போகிறார்கள்.

ஜென்மத்தில் சஞ்சரிக்கும் ராகு ஒன்றரை ஆண்டு காலம் அங்கிருந்து உலுக்கி எடுத்து விடுமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம்.

ராகு –கேதுக்கள் சாரபலத்தைப் பொறுத்தும் இருக்கும் இடத்தைப் பொறுத்தும் பலன் கொடுக்கும் என்று சொல்வார்கள். கோதண்ட ராகு என்பதால் கொடுப்பதில் ஒன்றும் குறைவிருக்காது.

ஆனால் அதே சமயம் சப்தம கேது திடீர் திடீரென விரயங்களையும் கொடுக்கும். மாற்றங்களையும் கொடுக்கும் . வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்வது தான் நல்லது. நல்ல விரயங்களைச் செய்யத் தொடங்குங்கள்.

மற்றவர்களுக்கு கொடுத்து உதவுங்கள் . கடமையைச் செய்யும் பொழுது கால் வாசி நேரத்தை கடவுள் வழிபாட்டிற்கும் ஒதுக்குங்கள். புதிய புதிய திட்டங்களைத் தீட்டி இதுவரை நடைபெறாமல் இருந்த காரியங் களில் ஒருசில இப்பொழுது நடைபெறதொடங்கும் . கொள்கைப்பிடிப்போடு செயல்பட இயலுமா? என்பது சந்தேகம் தான்.

கூட்டாளிகளை கண்காணித்துக் கொண்டேயிருந்தால் தான் கூடுதலாக வருகிற இலாபம் கைக்கு வந்து சேரும். பயணங்கள் அதிகரிக்கும். சாப்பிடக்கூட நேரமில்லாமல் அப்படி என்ன வேலை பார்க்கிறீர்கள் என்று குடும்பத்தில் உள்ளவர்கள் சொல்வார்கள். புதிய நண்பர்கள் வந்திணைவர். அதில் பொல்லாதவர்களும் வந்திணையலாம். அவர்களை இனம் கண்டு கொள்வது நல்லது.

இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடக் கவும், எடுத்த காரியங்களை எளிதில் முடிக்கவும் உங்கள் சுயஜாதகத்தில் ராகு –கேதுக்கள் இருக்கும் நிலையறிந்தும் பார்க்கும் கிரகத்தின் பலமறிந்தும் யோக பலம் பெற்ற நாளில் அதற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று முறைப்படி சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வது நல்லது. அப்பொழுது தான் கோதண்ட ராகு கோடி கோடியாய் உங்களுக்கு கொடுக்கும் ஆதரவுக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வைக்கும்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது குடும்பத்தில் உள்ளவர்களோடு மனக்கசப் புகளை உருவாக்கலாம் .

மாற்றுக்கருத்துடையோரின் எண்ணிக்கை கூடாமலம், இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. கேதுவுக்கு ப்ரீதியாக ஞாயிறு தோறும் ஆனைமுகப், பெருமானை வழிபட்டு வாருங்கள். திசைமாறிய விநாயகர் உங்களுக்கு தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத் துக் கொடுக்கும்.

சப்தம கேது பயணங்களை அதிகரிக்க வைக்கும் பயணங்களால் கிடைக்கும் அலைச்சல் இருந்தாலும் ஆதாயத்திற்கு குறைவிருக்காது. உழைப்பு அதிகரிக்கும் . இந்த நேரத் தில் ஊதிய உயர்வு உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கும்.

தொழில் செய்பவர்களுக்கு வருமானங்கள் வந்து கொண்டேயிருக்கும். மாமன்மைத்துனர் வழியில் ஒரு மங்கலச் செய்தி வந்து சேரலாம்.

ஒக்டோபர் 27 என்பது உங்கள் மனதில் பதித்து வைத்துக்கொள்ள வேண்டிய மறக்க முடியாத நாள். அன்று தான் ராகு என்ற மாபெரும் கிரகம் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கப்போகிறார். ஜென்ம ராகு நன்மைகளைத்தருமா? உண்மையிலேயே அது என்னவெல்லாம் செய்யும்? என்று சிந்தித்திருக்கும் உங்களுக்கு குரு வீட்டில் ராகு சஞ்சரிப்பதால் நல்ல சம்பவங்களையே நாடி வர வைக்கும் என்று நம்பலாம் . மேலும் ராகுவை கும்பிட்டால் சோகங்கள் மாறும் . சுகங்கள் கூடும்.

பொதுவாக ஜென்ம ராகு ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கும் அடிக்கடி சிறு சிறு தொல்லைகள் உடலைத்தாக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். இனம் புரியாத கவலை மனதில் இடம்பிடிக்கும். குணம் மிக்கவர்களாக இருந்தாலும் உங்களோடு பழகுபவர்களை உங்களை விட்டு விலக வைக்கலாம். பணத்தேவைகள் அதிகரிக்கும். ஆனால் மறுநிமிடமே உங்கள் கையில் பணம் வந்து சேரும்.

இனத்தவரின் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது. ஏமாற்றம் உங்களோடு இணைந்திருக்கும் என்பதால் எதையும் யோசித்து பெரியவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செய்வது நல்லது. ராகுவைப் போல கொடுப்பவனும் இல்லை என்பதால் ஒரு வழியில் தடை ஏற்பட்டால் மற்றொரு வழி திறக்கும்.

அதேசமயத்தில் புனர்பூச நட்சத்திரங் காலில் வியாழன் சாரத்தில் கேது சஞ்சரிக்கத் தொடங்குகிறார். 26.5.2010 வரை குரு காலில் தான் கேது சஞ்சரிக்கிறார்.

குரு உங்கள் ராசிக்கும் அதிபதி நான்கமிடத்திற்கும் அதிபதியாகும் . எனவே இல்லம் கட்டி குடியேறும் வாய்ப்பை அல்லது இல்லம் வாங்கி குடியேறும் வாய்ப்பை உருவாக்கும். வாங்கும் பொழுது குடும்ப உறுப்பினர்களில் யாருடைய ஜாதகத்தில் செவ்வாய் பலம் பெற்றிருக்கிறதோ அவர்கள் பெயரில் வாங்குவது நல்லது.

பொது நலத்தில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரும். அதிக பிரயாசை எடுத்துதான் ஒரு சில காரியங்களை முடிக்க வேண்டிய சூழ்நிலை இப்பொழுது உங்களுக்கு வந்து சேரலாம். அடுத்தவர்களுக்கு பணம் பொறுப்புகள் சொல்லும் பொழுது யோசித்துச் சொல்வது நல்லது. வாழ்க்கைத் துணை வழியே அனுசரித்துச் சென்றால் பிரிவு ஏற்படாது.

30.9.2010 முதல் 8.6.2011 வரை மூலம் நட்சத்திரத்தில் கேது காலில் ராகு சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாயின் காலில் கேது சஞ்சரிக்கப்போகிறார்.

எனவே பிள்ளைகள் வழியில் ஒரு பெரும் விரயம் ஏற்படலாம். அதன் கல்வி நலன் கருதியோ கல்யாண அமைப்பு கருதியோ ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உண்டு. குழந்தைகளிடம் இக்காலத் தில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது.

அவர்கள் தன் நோக்கத்திற்கு எதையாவது செய்யலாம். அதற்கு நீங்கள் வழிவகை செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகலாம். எனவே குடும்ப உறுப்பினர்களை கண்காணித்து கொள்வது நல்லது. குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும். சொத்துக்களால் விரயம் ஏற்படும். சொந்த–பந்தங்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். செவ்வாய் தோறும் விரதம் , வழிபாடுகளை கடைப்பிடித்து வந்தால் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும்.

29.12.2009 முதல் 29.9.2010 வரை பூராட நட்சத்திரத்தில் சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

தங்கம் , வெள்ளி தங்கவில்லையே என்ற கவலை மாறும். பொன் பொருள் வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும். கோவில் திருப்பணிகளை முன்நின்று நடத்துவீர்கள்.

அதேசமயத்தில புனர்பூச நட்சத்திரக் காலில் வியாழன் சாரத்தில் கேது சஞ்சரிக்கிறார். மே 2010 –க்கு மேல் திருவாதிரை நட்சத்திரத்தில் ராகு காலில் கேது சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக சுபச் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களின் குறைகளைத் தீர்த்து வைப்பீர்கள். நீண்ட நாட்களாக கிடைக்காத அரசு வழிச் சலுகைகள் இப்பொழுது கிடைக்கும். வெளியூர் மற்றும் வெளிநாட்டு முயற்சி விருப்பம் போல் நிறைவேறும் . பொல்லாதவர்களின் இடையூறுகளைத் தவிர்க்க பொறுப்புணர்ச்சியுடன் செயல்படுவது நல்லது.

பூமி சேர்க்கை மற்றும் பொருட் சேர்க்கையில் ஆர்வம் காட்டுவீர்கள். சாமி துணையோடும். தைரியத்தோடும் காரியங்களைச் செய்யத் தொடங்கினால் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் திருமண பேச்சுக்களை முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

ஜென்மத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் செல்வ நிலையில் உயர்வு கிடைக்கவும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

சப்தம கேதுவால் தக்க விதத்தில் வாழ்கை அமையவும் இல்லத்தில் நல்ல சம்பவங்கள் எந்த நாளும் நடைபெறவும் வாரந்தோறும் வியாழக்கிழமையன்று குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

சுயஜாதகத்தில் ராகு– கேதுக்களின் பலமறிந்து சர்ப்ப சாந்திளை முறையாகச் செய்து வழிபட்டு வாருங்கள். (தொடரும்)

## இலங்கையில் தற்போதைய அரசாங்கத்திற்கு அரசியல் நோக்கோ கொள்கையோ கிடையாது

### ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு அரசியல் நோக்கோ கொள்கையோ கிடையாது . அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பின ரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எந்தக் கட்சியானாலும் ஒரு கொள்கை இருக்க வேண்டும்.

எனினும் தற்போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கொள்கைகள் நாம் உருவாக்கிய கூட்டமைப்பின் கொள் கைகள் அல்ல.

குறிப்பாக தற்போதைய அமைச்சரவையில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பை விமர்சித்தவர்களும் அந்தக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்களுமாவர்.

தற்போதைய அரசாங்கத்திற்கு அரசியல் நோக்கமோ கொள்கையோ கிடையாது. தனிப்பட்ட லாபம் மற்றும் சந்தர்ப்பவாதம் கருதியே அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. தென் பகுதி மக்கள் அரசாங்கத்திற்கு ஒரு சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளனர்.

யுத்தத்தை வெற்றி கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் தென்பகுதி மக்கள் அரசாங்கத்திற்கு 85 வீத வாக்குகளை அழித்திருக்க வேண்டும் எனவும் 67 வீத வாக்குகளையே தென்பகுதி மக்கள் அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளனர். 5 இலட்சம் மக்கள் வாக்களிக்கவில்லை மொனராகலையில் 81 வீத வாக்குகளைப் பெற்று 2 மாதங்களில் தென் மாகாணத்திற்குச் சென்ற போது அந்த வாக்குக்கள் 67 வீதமாக குறைந்துள்ளன. தென்பகுதி மக்களை முட்டாள்களாக்க முடியாது என்பதை அங்குள்ள மக்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர் எனவும் விஜேதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார் சிங்கள நாளிதழ் ஒன் றுக்கு வழங்கிய செய்தியில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். (ஓ-4)

## தமிழ் வர்த்தகர் ராஜ்ராஜரட்ணம் தனது கெலியன் நிறுவனத்தை விற்பனை செய்ய தீர்மானம்

### அவரது சட்டத்தரணி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கினார் என உறுதிப்படுத்தப்பட்டுள்ள அமெரிக்காவைச் சேர்ந்த தமிழ் வர்த்தகரான ராஜ் ராஜரட்ணம் தனது கெலியன் நிறுவனத்தை விற்பனை செய்யத் தீர்மானித்திருப்பதாக அவரது சட்டத்தரணி ஜோன் டவுட் அமெரிக்க நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

30 இலங்கையர்களினால் ராஜ ரட்ணத்திடம் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இதிலிருந்து விடுபடுவதற்காக அவர் இந்த நிறுவனத்தை விற்பனை செய்ய முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதே வேளை அவருக்கு வழங்கப்பட்டுள்ள 100 மில்லியன் டொலர் பிணையை 25 மில்லியனாகக் குறைக்குமாறு ராஜரட்ண விடுத்த கோரிக்கையையும் அமெரிக்க நீதிமன்றம் நிராகரித்துள்ளதாக திவயின கூறியுள்ளது. (ஓ-6)

# பாராட்டி வாழ்

## உயர் தேசிய கணக்கிய



ம.ரவிசாங்கர் | த.குபேந்திரன் | த.அருட்சுதன் | மு.மகீமன் | சி.சுரேந்திரா | சி.உஷங்கர் | செ.பிரபாகரன் | ச.உஷாந்தினி | ப.பாமிலா | இ.ராஜ்குமார் | இ.ரஜ



ஜெ.அசித்தா | மு.துர்க்காஜினி | ந.ஜெனார்த்தனன் | சே.மயூரா | ந.புஸ்பவதனா | கு.சுதர்சினி | கு.துசியந்தி | மு.சாம்பவி | சி.கஜீபன் | ப.விஜயராஜ் | பா.ச



ஜெ.பவீதன் | த.தவேந்திரன் | கு.கமலினி | செ.ரசிகாந் | பா.உதயபானு | க.செல்வநந்தினி | பெ.அமலேஸ் | மா.ரூபாஜினி | ந.கருணேஸ்வரி | சோ.சர்மிளா | சோ.



க.திருமகள் | பா.பிரமினா | க.மீனலோஜினி | ச.சபேஷ் | இ.நிரஞ்சன் | சு.முகுந்தன் | சி.காயத்திரி | க.பாலரிஷி | ந.தனேஸ் | சி.மயூரன் | நா.ர



இ.சுகன்யா | அ.பிரதீபன் | வே.நிர்மலா | செ.சந்திரிகா | க.சுஜாதா | க.குகநேசன் | து.சுரேந்திரன் | கி.கௌரி | த.றிபோசிகா | ச.தர்சினி | ச.மயூ



தி.திருவருட்செல்வி | சி.றஜீபன் | நா.கஜேந்திரா | ச.சிவறஞ்சினி | ச.சாந்தினி | யோ.சுபாசினி | சி.செந்தூரன் | இ.ராஜநந்தினி

## உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (HNDE)



ம.சுரேகா | செ.றஞ்சித்குமார் | ச.நளினி | சி.நிறோஜன் | தா.சுகந்தன் | பு.ஐங்கரன் | சி.லோகதர்ஜினி | ப.கரிலதா



க.சுகிர்தா | பே.கௌரிபாலன் | தி.றோய்யூலியஸ் | ஞா.கிருஜா | சி.சிவதர்சினி | சி.பிரதீபா | சோ.லக்சிகா | ச.சிவலட்சுமி



தி.ராஜ்குமார் | தி.ஜாமினி | சி.நர்த்தனா | சி.ஞானகரன் | க.கபிலன் | அ.அலையரசி | ந.பிருந்தா | ஆ.சிவசுதர்சன்



சி.சுகித்தா | சி.ஜான்சி | இ.நிசாந்தினி | ப.அனுசுயானு | சி.ராஜீவ் | பூ.சிவதர்சினி | க.தேனுசா | சு.யசோதரா | வீ.தயாகரன்


இன்று (04.11.2009)
நடைபெறும் இலங்
வைபவத்தில் H
உயர் தொழில்
மாணவர்களை
பல ய



ALUMNI ASSOCIA
JAFFNA ADVANCED TECHNOLOGICA
No:665/2, BEACH ROAD,
JAFFNA

(HNDA)
(HNDE)
(HNDM)
(HNDBS)



# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை-2009
# பயிற்சி வினாத்தாள் -கணிதம்

## பகுதி-II A.Ramesh B.Sc (Hons)

- ❖பகுதி A இல் ஐந்து வினாக்களுக்கும் பகுதி B இல் ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் பத்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- ❖ஒவ்வொரு வினாக்களுக்கும் 10 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்
- ❖அடியின் ஆரை rஆகவும் உயரம் h ஆகவும் உள்ள ஒரு

செவ்வட்டக்கூம்பின் கனவளவு $= \frac{1}{3}\Pi r^2 h$

### பகுதி A

01. ரவி,ரகு குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்தை வைத்திருக்கின்றனர். இருவரும் வைத்திருக்கும் மொத்தப் பணம் ரூ.145 ஆகும். ரவி வைத்திருக்கும் பணம் ரகு வைத்திருக்கும் பணத்தின் இரு மடங்கு பணத்திற்கு ரூ 95 குறைவாகும். ரவி ரூ x தொகையையும் ரகு ரூ y தொகையையும் வைத்திருக்கின்றனர் எனக்கொண்டு,

i. மேலே தரப்பட்ட தரவுகட்கு இரு சமன்பாடுகளை எழுதுக.
ii. நீர் பெற்ற சமன்பாடுகளைத் தீர்ப்பதன் மூலம் இருவரும் வைத்திருக்கும் பணங்களைத் தனித்தனியே காண்க.

b. i. உருவில் இயல்பொத்த முக்கோண சோடிகளை எழுதுக.

ii. $BC^2$=CA,DC




02.தையல் இயந்திரம் ஒன்றின் விலை ரூ 90 000 ஆகும். உடன் காசுக்கு வாங்குவதாயின் 5% கழிவு கொடுக்கப்படுகிறது. இதனை வாடகைக் கொள்ளனவு முறையில் வாங்குவதாயின் முதலில் விலையின் 1/5 ஐச் செலுத்தி எஞ்சிய தொகை ஒவ்வொன்றும் ரூ 4250 வீதம் 24 சம மாதாந்த தவணைகளில் செலுத்தி முடிக்கலாம்.

i. உடன் காசுக்கு வாங்குவதாயின் செலுத்தவேண்டிய பணம் எவ்வளவு?
ii. வாடகைக் கொள்வனவு முறையில் வாங்குவதாயின் ஆரம்பத்தில் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு ?
iii. முதல் செலுத்துகையின் பின் எஞ்சிய கடன் பணம் எவ்வளவு?
iv. செலுத்த வேண்டிய மொத்த வட்டி எவ்வளவு?
v. வாடகைக்கொள்வனவு முறையில் வாங்கிய ஒருவர் உடன் காசுக்கு வாங்கியிருந்தால் எவ்வளவு பணத்தைச் சேமித்திருக்கலாம்?
vi. வாடகைக் கொள்வனவு முறையில் வாடிக்கையாளர் அடையும் நன்மை தீமை ஒன்று தருக.

3. மணற்குவியல் ஒன்று கூம்பு வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடியின் சுற்றளவு 4.4 m ஆகும். அதன் செங்குத்து உயரம் 2.4 m ஆகும்.



i. மணற்குவியலின் ஆரையாது?

ii மணற்குவியலின் சாய்வு நீளத்தைக் காண்க.

iii மண்ற்குவியலின் கனவளவைக் காண்க

iv மணற்குவியலின் மேற்பரப்பளவைக் காண்க.

v. இதே ஆரையையும் இதே உயரத்தையும் உடைய உருளையினுள் இம்மணலானது நிரப்பப்படின் உருளையினது உயரத்தின் என்ன பங்கில் மணல் நிரம்பியிருக்கும்

vi.அவ் உருளையினுள் மணலின் உயரம்என்ன?

vii.அவ்வுருளையின் 1/2 பகுதி நிரம்பும் வகையில் மிகுதிப் பகுதிக்குச் சீமெந்து இடப்பட்டு கொங்கிறீற் கலவை ஆக்கப்பட்டது. எனின் அக் கலவையில் கலக்கப்பட்ட சீமெந்து மணலின் விகிதத்தைக் காண்க.

4) வகுப்பொன்றில் கணிதப் பரீட்சை ஒன்றைச் செய்து முடிக்க 40 மாணவா களுக்கு எடுத்த நேரம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| எடுக்கும் நேரம் (நிமிடம) | 48-56 | 56-64 | 64-72 | 72-80 | 80-88 | 88-96 | 96-104 | 104-112 | 112-120 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 2 | 3 | 5 | 9 | 6 | 5 | 4 | 4 | 2 |

i. இவ்வினாப்பத்திரத்திற்கு வழங்கப்பட்ட நேரம் யாதாக இருக்கலாம்?

ii. கூடுதலான மாணவர்களின் எண்ணிக்கை எந்நேர ஆயிடையைக் கொண்டது?

iii. இடைய வகுப்பு யாது?

iv. இப் பரீட்சையைச் செய்து முடிக்க ஒரு மாணவனுக்கு எடுக்கும் இடை நேரத்தைக் காண்க.

v. வகுப்பில் உள்ள ஒருவரை எழுமாறாகத் தெரிந்தால் அம்மாணவன் 1 மணித்தியாலம் 20 நிமிடத்தில் அப்பரீட்சையை செய்து முடித்தவராய் இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

05)a. முக்கோணி ஒன்றின் இரு பக்கங்களின் நடுப்புள்ளிகளை இணைக்கும் கோட்டிற்கும் அதன் மூன்றாம் பக்கத்திற்குமிடையிலான தொடர்புடையமையை எழுதுக.

b.முக்கோணி ABC இன் பக்கங்கள் CA,AB ஆகியவற்றின் நடுப்புள்ளிகள் முறையே EF என்பனவாகும். BE யும் CFவும் Gஇல் இடை வெட்டுகின்றன. நீட்டப்பட்ட AG ஆனது பக்கம் BC ஐ D இலும் FC இற்குச் சமாந்தரமாக B யிறகூடாக வரயப்பட்டநேர் கோட்டை M இலும் சந்திக்கின்றது.




பின்வருவனவற்றை நிறுவுக.

i. AM இன் நடுப்புள்ளி G

ii. CM//BE

iii. BGCM ஓர் இணைகரம்

06) 40 மாணவர்களைக் கொண்ட உயர்தர வகுப்பில் மாணவர்களிடம் இருந்து பெற்ற தகவல்கள் வென்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.




i.இரசாயனவியல் கற்போர் 24 பேர் எனின் A இன் பெறுமதியைக் காண்க.

ii. aகுறிக்கும் பிரதேசத்தைச் சொற்களில் விபரிக்குக.

iii.இரசாயனவியல் கற்கும் பெண்களின் எண்ணிக்கை யாது?

vi.இரசாயனவியலை அல்லது பௌதிகவியலைக் கற்கும் ஆண்கள் எத்தனை பேர்

v.ஆண்களின் தொடையை M எனவும் இரசாயனவியலைக் கற்போரின் தொடையை C எனவும் பௌதிகவியலைக் கற்போரின் தொடையைP எனவும் கொண்டு தொடைக்குறியீட்டைப் பயன்படுத்தி பௌதிகவியலைக் கற்கும் இரசாயனவியலைக் கற்காத பெண்களின் தொடையை M.P.C ஆல் தொடர்பு படுத்துக.

vi. வகுப்பில் உள்ள மாணவர்களில் ஆணாக அல்லது பெண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காட்டும் மரவரிப்படத்தை வரைந்து அதில நிகழ்தகவுகளைக் குறிக்க.

vii.அவ்வரிப்படத்தில் வகுப்பிலுள்ள ஒருவர் பௌதிகவியல் கற்பவராக அல்லது பௌதிகவியலைக் கற்காதவராய் இருப்பதற்கான நிகழ்தகவைக் காட்டுமாறு விரிவுபடுத்துக.

(தொடரும்)

## சர்வதேச நாணய நிதியத்திற்கு

# பதிலளிக்க முடியாமையினாலேயே அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கவில்லை

### ஐ.தே.க எம்.பி ரவி கருணாநாயக்க



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துக்கு பதிலளிக்க முடியாது என்ற காரணத்தினாலேயே அரசாங்கம் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்காமல் கணக்கு வாக்கெடுப்பை முன்வைக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கம் முன்வைக்கவுள்ள கணக்கு வாக்கெடுப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

சர்வதேச நாணய நிதியத்திடம் கடனை பெற்றுக் கொண்ட அரசாங்கம் பல நிபந்தனைகளுக்கு உட்பட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக வரவு செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையை 7 வீதமாகக் குறைப்பதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

ஆனால் அரசாங்கத்தின் தவறான பொருளாதார கொள்கை காரணமாக வரவு செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையை 7 வீதமாக குறைக்க முடியாது. பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தீர்க்கதரிசனமான முறையில் அரசாங்கம் செயற்படவில்லை.

தற்போதைய நிலைமையில் அரசாங்கத்தினால் வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டால் அதன் துண்டு விழும் தொகை நிச்சயம் 9 வீதத்தைத் தாண்டும். இதனடிப்படையிலேயே அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்காமல் இருக்க தீர்மானித்துள்ளது.

காரணம் அரசாங்கத்தினால் சர்வதேச நாணய நிதியத்துக்கு பதிலளிக்க முடியாமல் போய்விடும்.

இதேவேளை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தொடர்பில் கடந்த ஒன்றரை வருடங்களாக நாங்கள் குரல் கொடுத்து வருகின்றோம்.

அரசாங்கத்தின் கவனத்துக்கு பல்வேறு விடயங்களை கொண்டு வந்தோம். ஆனால் நாங்கள் கூறிய எந்த விடயம் தொடர்பிலும் அரசாங்கம் கவனத்திற் கொள்ளவில்லை.

தற்போது ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை இழந்து விடுவோமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனினும் அரசாங்கம் கரிசனை காட்டுவதாக தெரியவில்லை. குறித்த வரிச் சலுகையை இலங்கை இழந்தால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்படலாம்.

(ஓ-4)

## காங்கேசன்துறை கடற்பகுதியில் 18 இந்திய மீனவர்கள் கைது

(கொழும்பு)

யாழ். காங்கேசன்துறை கடற்பகுதிக்குள் அத்துமீறி பிரவேசித்த 18 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

இந்த மீனவர்கள் பயணம் செய்த 5 டோறா படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்தது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைதான இந்திய மீனவர்கள் அனைவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ)

# முகாமிலிருந்து திரும்பிய கிழக்கு பகுதி தமிழ் மக்களின் வீடுகளில் சிங்களக் குடியேற்றம்

### அரிய நேத்திரன் எம்.பி. தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது முகாம்களில் அடைக்கப்பட்டு தற்போது சொந்த இடங்களுக்கு திரும்பும் தமிழர்கள் புது வேதனையை எதிர்நோக்கியுள்ளனர். அவர்களது வீடுகளை சிங்களவர்கள் ஆக்கிரமித்துள்ளது தெரிய வந்துள்ளது.

இத்தகைய வேதனை அனுபவம் சுமார் ஆயிரத்து 500 தமிழ்க் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளது. முகாம்களில் அடைபட்டுள்ள அகதிகளை சொந்த வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக அறிவித்து இலங்கை அரசு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது.

அதன்படி சுமார் ஆயிரத்து 500 குடும்பங்கள் திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பில் உள்ள தமது வீடுகளுக்கு திரும்பினர். அங்கு சென்றபோது அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவர்களது வீடுகளை சிங்களவர்கள் ஆக்கிரமித்துள்ளது தெரிய வந்தது.

இந்தத் தகவலை நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இலங்கை தமிழ் அரசு கட்சி தலைவர் தெரிவித்துள்ளார்.

போருக்கு முன்னர் இந்தப் பகுதிகள் தமிழர்களின் அனுபவத்தில் இருந்தன. முகாம்களுக்கு அவர்கள் மாற்றப்பட்டதும் அவர்களது இடங்களை 500 இற்கும் மேற்பட்ட சிங்கள குடும்பங்கள் ஆக்கிரமித்து வீடுகளை கட்டிக்கொண்டு தமிழர்களின் நிலங்களில் விவசாயத் தொழிலை செய்து வருகின்றனர். என இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர் அரியநேத்திரன் அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து விசாரித்து பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு செப்டெம்பர் 16 ஆம் திகதி கடிதம் எழுதியதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடிதத்தை பரிசீலித்த ஜனாதிபதி, இது குறித்து விசாரித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி உள்ளாட்சி நிர்வாகத்தை பணித்துள்ளார். இதுவரை உள்ளாட்சி நிர்வாகம் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை.

எனவே விடுமுறை காலம் முடிந்ததும் எமது முறையீடு தொடர்பாக என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கேட்க முடிவு செய்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே போல் வட மேற்கில் உள்ள புத்தளம் பகுதியிலிருந்து முகாம்களுக்கு அனுப்பப்பட்ட தமிழர்களுக்கும் இதே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அவர்களது வீடுகளையும் சிங்களவர்கள் ஆக்கிரமித்துள்ளனர். மிகக் குறுகிய காலத்தில் தமிழர் பகுதிகளை சிங்களவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து ஆக்கிரமித்துள்ளனர் என்று அரியநேத்திரன் தெரிவித்ததாக அந்த நாளேடு மேலும் தெரிவித்துள்ளது.

தமிழர்களின் வீடுகளை சிங்களவர்கள் ஆக்கிரமித்துள்ள விவகாரம் பற்றி நாடாளுமன்றத்தில் கடந்த வாரத்தில் தமிழர் கட்சி ஒன்றின் தலைவர் ஆர். சம்பந்தன் பிரச்சினை எழுப்பினார்.

தமிழர்களின் வீடுகளை ஆக்கிரமிக்கும் சிங்களவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என்றும் சம்பந்தன் குற்றம் சாட்டியதாக அந்த நாளேடு மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே முகாம்களில் இருப்போரின் எண்ணிக்கை அக்டோபர் 27 ஆம் திகதி நிலவரப்படி ஒரு இலட்சத்து 80 ஆயிரமாக குறைந்துள்ளது எனவும் விடுதலைப்புலிகளுடனான போர் முடிவுக்கு வந்த நேரத்தில் சுமார் 3 இலட்சம் பேர் முகாம்களில் அடைக்கப்பட்டிருந்தனர் எனவும் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

அகதிகளை அவரவர் சொந்த வீடுகளுக்கு அனுப்புவதற்கு ஐ.நா ஆதரவுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு கிடைத்த பலன் இது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ஓ-4)

## கழிவுப் பொருட்கள் அடங்கிய மேலும் ஒரு தடுப்பூசி மருந்துக்குப்பி

கழிவுப் பொருட்கள் அடங்கிய மேலும் ஒரு தடுப்பூசி மருந்துக் குப்பி எம்பிலிப்பிட்டி வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த தடுப்பூசி மருந்துக் குப்பியை மேலதிக பரிசோதனைக்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைத்ததாக வைத்தியசாலையின் உயர் அதிகாரியொருவர் கூறினார்.

புறோ மகஸின் என்ற தடுப்பூசி மருந்துக் குப்பியிலேயே கழிவுப் பொருட்கள் இருந்ததாக அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

சத்திர சிகிச்சைக்கு முன்னர் மயக்க மருந்து தடுப்பூசி ஏற்றப்படும் போது வலி நிவாரணி மருந்து வழங்கப்படும் போதும் ஏற்படும் ஒவ்வாமையைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த மருந்து பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### அசோகமரம்

Botanical Name- Saraca indica
Family - Leguminosae
Engl - Asoka tree
Sinh - Asoka

6-9 மீற்றர் உயரமுடைய பசுமை மாறாத மரமாகும். கரடு முரடான பட்டை அடர்ந்த பழுப்பு, சாம்பல் முதல் கருமை நிறமுடையது. இரு சிற்றிலைகளில் முடியும் சிறகுக் கூட்டிலை, 15-20 செ.மீ நீளமுடையது. சிற்றிலைகள் 6-12, தோல் போன்ற நயம் உடையது, நீள் உருளை அல்லது ஈட்டி வடிவமுடையது.

7.5 - 22.5 செ.மீ × 1.3 செ.மீ. மலர்கள் அடர்ந்த கோணக் காம்புகளில் அமைந்திருக்கும், மிகவும் மணமிக்கவை, செம்மஞ்சள் - மஞ்சள் நிறமுடையவையாக மாறும் ; கனிகள் தட்டையாக, நீள் உருளை வடிவம் கொண்டு கட்டைத்தன்மை கொண்டு 7.6 - 2.5 × 3.8×5.1 செ.மீ விதைகள் 4-8, முட்டை வடிவமானவை, தட்டையானவை. மலர்களை பங்குனி - சித்திரை மாதங்களிலும், கனிகளை ஆவணி - புரட்டாதி மாதங்களிலும் காணலாம்.

### பரம்பலும், இனவிருத்தியும்

யாழ். மாவட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொக்குவில் ஆகிய இடங்களில் காணப்படுகின்றது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

### மருத்துவப் பயன்கள்

◆ அசோகம் பூக்களை சேகரித்து நிழலில் உலர்த்தி அவற்றை பொடித்து, அரித்து வைத்துக் கொண்டு ஒரு டம்ளர் தண்ணீரில் 2 தேக்கரண்டி மேற்படி பொடியை போட்டு கலக்கி



உள்ளுக்கு எடுக்க வயிறு சம்பந்தமான நோய்களாக வயிற்று கடுப்பு, சீதபேதி போன்றவற்றை நீக்க வல்லது. அல்லது மேற்படி சூரணம் 1கிராம் எடுத்து, சிறிது கசகசாவையும் வாயிலிட்டு நீடித்த வயிற்றுக்கடுப்பு தீரும்.

◆ 85 கிராம் எடையுள்ள அசோகப் பட்டையைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி இடித்து, ஒரு மட்பாண்டத்தில் போட்டு 150 மில்லி பசுவின் பாலும், 600 மில்லி சுத்த நீரும் விட்டு 120 மில்லியாக சுண்டக்காய்ச்சி 30 மில்லி அளவு ஒரு நாளைக்கு 6 மணித்தியாலயத்திற்கு ஒருக்கால் கொடுத்துவர பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாடு தீரும். இக் குடிநீரை இரத்தப் போக்கு நிற்கும் வரை கொடுக்கலாம். அல்லது அசோகம் பட்டையை இடித்துச் சாறு பிழிந்து 1 மேசைக்கரண்டி அளவு குடிக்க கொடுத்தாலும் பெரும்பாடு தணியும்.

◆ அசோகின் ஈரமுள்ள பச்சைப் பட்டையை தண்ணீரில் ஊறப்போட்டு, அதனுடன் பழைய வெல்லத்தை கரைத்து பின்னர் காட்டாத்திபூ, தாமரைக்கிழங்கு, ஓமம், சந்தனம், கோரைக்கிழங்கு முதலியவற்றைக் கூட இடித்துப் போட்டுக் கலக்கி ஒரு மூடி பானையின் வாய்க்கு இறுக்கி சீலை செய்து 40 நாட்கள் புளிக்க வைத்து பின்பு வடிக்க தெளிவு நீரை எடுத்து காலை, மாலை 15 மில்லி அளவு கொடுக்க பெரும்பாடு, வெள்ளை, இடுப்புவலி, கர்ப்பப்பை தாபிதம் போன்றவற்றிற்கு சிறந்த நிவாரணியாகும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

◆ அசோகின் விதைகளை சேகரித்து பொடித்து 1-2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் கொடுக்க சிறுநீர் கழிவை அதிகரிக்கும்.

# த்துகின்றோம்

## பல் டிப்ளோமா (HNDA)



ஜனிகாந் | க.சிவாஜினி | அ.சோபனா | த.பிரபாலினி | சு.மகீரன் | நா.குமணதாசன் | மை.மகிந்தன் | ந.பிரதாப் | வே.ஜெயப்பிரதா | இ.பிறேம்குமார் | அ.அமிதராஜ்

சர்மினி | த.யோகநாத் | தி.சந்திரிகா | க.தாட்சாயினி | ம.கிருபாகரன் | ச.அமுதினி | சு.சுவர்ணா | ச.சசிக்காந் | த.சயந்தினி | த.தேவப்பிரியா | கு.தயாளினி

.பாரதி | ப.செந்தூரன் | க.கிரிகரன் | ந.துஷியந்தன் | சி.ஆனந்தரூபி | நா.சுபாசினி | அ.பத்மாஜினி | பூ.ரஜீதன் | கி.ஜெயராணி | அ.ரஞ்சன்தாஸ் | த.துஷ்யந்தன்

ராகினி | பா.ரஞ்சித் | சி.அபிராமி | சி.பிருந்தன் | ப.தயாபரி | இ.காண்டீபன் | ச.லோகநாதன் | கை.தீபா | பா.கஜேந்திரன் | சி.ஜனனி | பா.கஜீதரன்

பூரபிரியா | த.கமலரூபன் | லோ.றமா | ய.சுதர்சினி | கு.சந்திரமோகன் | பா.மதனரூபி | இ.வசந்தரூபன் | இ.ஜெயமோகன் | தி.நீர்ரயா | நா.றாஜினி | இ.கௌரீஸ்வரி

புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில்
ங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 6 ஆவது பட்டமளிப்பு
NDA, HNDM, HNDE, HNDBS பட்டம் பெறும் யாழ்ப்பாண
ல்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க அங்கத்துவ
ளையும், பட்டம் பெறும் ஏனைய மாணவர்களையும் மேலும்
ட்டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.



சி.கிருபாநந்தி | த.மாலினி | பா.பாலமுரளி | ம.ருவீன்சலஸ்

## உயர் தேசிய வணிக டிப்ளோமா (HNDBS)



பா.ஜெயகிருஷ்ணா | ச.வாசுகி | சி.ரங்கதாஸ் | தி.சிவதீபம்

## உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDM)

ATION

AL INSTITUTE,

),



த.மதுமதி | க.பவீந்திரன் | வே.பிரியதர்சினி | தி.துஷிதா | ந.கஜவதனி | அ.ரவீந்திரா | க.சஞ்ஜுபன்

ப.சாந்தி | து.அபிராமி | செ.காயத்திரி | செ.விஜித்தா | பொ.பாபிலா | தே.பார்மிலா | ம.லதாநிதி

ச.தமிழினி | தி.நவந்திராஜ் | ந.ஆரணி | அ.சுதாஜினி | தி.நித்தியா | ம.தாட்ஷாயினி | சோ.கபிலன்



ப.கௌரி | அ.பகீரதன்

அ.பெட்ரீன் சகாஜினி | லோ.சோபிகா

அ.அகிந்தன் | நீ.ஷாந்தி

# நலன்புரி முகாம் மாணவர்களின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**தர்மபுரம் மகா வித்தி**

ரி. தங்கநிலா - 121, ஆர். ரஜிந்தன் - 113, எஸ். டினேக்ஸ்சன் - 122, ஆர். கஜன் - 116, எஸ். அர்ச்சனா - 124.

**சென் திரேசா மகளிர் மகா வித்தி**

ஏ. குணாவிசா - 150, எஸ். உமாவினி - 113, பி. ஜீவிதா - 111, ஏ. தனர்சன் - 113, எஸ். மிதுளா - 117, ர. சோபாஜினி - 146, எம். கஜலக்ஷன் - 130, ஆர். டிலக்ஷா - 124, என். செல்வின் - 112, எஸ். விஜிந்தா - 156, ரி. ஜதுசா - 116, ரி. புருசோத் - 132.

**சென். பத்திமா றோ.க.த.க. பாடசாலை**

வை. நிரோஜா - 114, கே. தமிழினி மதுராஞ்சலி - 155, ஏ. யாழினி - 116, **எஸ். பிரியந்தி - 162 - 5**, ரி. விதுர்சன் - 137.

**ஸ்கந்தபுரம் இல. 2 அ.த.க. பாடசாலை**

ஆர். ரம்மியா - 131.

**ஸ்கந்தபுரம் இல. 01 அ.த.க. பாடசாலை**

யு. டிலக்ஷனா - 128, ஜ. வேணுகா - 136, பி. தர்சிகன் - 132, எல். நிருஜன் - 133.

**சிவநகர் அ.த.க. பாடசாலை**

கே. பானு - 124, எம். பிரதீபா - 125, எஸ். கலாசன் - 121.

**இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை**

ஜி. சிந்துஜன் - 151, எஸ். லக்ஷனா - 113, **ஜெ. லோஜிகா - 165 -3.**

**இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை**

**வி. செந்தாழன் - 164-4**, ஏ. சங்கீர்த்தனா - 115, எஸ். ரவீனா - 150, கே. ஜனகன் - 118, எஸ். தயாணந் - 112, ரி. தரணிதன் - 118.

**இராமநாதன் மகாவித்தி**

எஸ். பிரசாந் - 127, எஸ். தனுசியன் - 137, பி. கிருசாளினி - 126, ஆர். திக்சிகா - 137, என். தரணியா - 128, ஆர். வான்மதி - 158, என். கரேந்திரன் - 121, எஸ். ஜெசா - 126, எம். தனுசிகன் - 114, கே. டினோசிகா - 111, எஸ். திலக்ஷா - 118, வி. கிருசாந்தன் - 114, எம். மிதுசா - 124, வி. ரஜித்தா - 117.

**புன்னை நீராவி அ.த.க. வித்தி**

ஈ. வித்தியா - 126.

**பூநகரி மகா வித்தி**

யு. வினித்தா - 116.

**பரந்தன் இந்து மகா வித்தி**

ரி. பிரவீனா - 126, சி. சஜிக்கா - 113, ஜெ. டன்சிகன் - 138, எஸ். நிதுஷன் - 112.

**பரந்தன் அ.த.க. பாடசாலை**

ரி. விஜாசன் - 111, பி. கஜனி - 141.

**பன்னக்கண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

எஸ். மதுவர்த்தனி - 133.

**பளை றோ.க.த.க பாடசாலை**

வி. கோபிகா - 118.

**பளை மத்திய கல்லூரி**

பி. விஸ்ணுகாந்தன் - 124, வி. அபிலாஷா - 157.

**ஊற்றுப்புலம் அ.த.க. வித்தி**

வி. மகிழினி - 122.

**நாகேந்திரா வித்தி**

என். கீர்த்தனன் - 127, ஏ. தர்சிகா - 126, எம். மதுஷன் - 137.

**நாச்சிக்குடா அரசினர் மத்திய மகா வித்தி**

எஸ். பவுஸ்ரின் - 126.

**முருகானந்தா மகா வித்தி**

பி. தேவப்பிரியா - 125, கே. அபிஷா - 154, எஸ். தேசனா - 131, ஆர். சா்மிலன் - 123, எஸ். நிருசா - 168.

**முழங்காவில் மகா வித்தி**

ஆர். அஜிதன் - 123, வி. ஜதுசன் - 139, ஜெ. அனிசா - 118, எஸ். ரம்யா - 145, கே. தங்கேஸ்வரி - 125, ரி. தர்சிகா - 125, வி. கிரியா - 135, பி. இந்துஜா - 131, ரி. மிதுர்சிகா - 115.

**குஞ்சுக்குளம் கணேசா வித்தி**

கே. கம்சிகா - 130.

**குமிளமுனை அ.த.க. பாடசாலை**

பி. தொம்சன் - 124.

**கோவில் வயல் சி.சி.த.க. பாடசாலை**

ரி. கேதினி - 113.

**கிராஞ்சி அ.த.க. வித்தி**

கே. ஸ்ரீவித்தியா - 119, ரி. நிலவன் - 111.

**கிளி. மகா வித்தி**

கே. கவிதன் - 117, கே. மதுசன் - 113, வி. விதுசன் - 120, கே. அபினோசா - 116, எஸ். மாதுளா - 123, வி. விதுர்சன் - 118, பி. மேரி இசபெல்லா - 129, எம். ரஜீவன் - 132, எஸ். அகல்யா - 127, ஆர். டினுச்சன் - 129, எஸ். கஜனி - 113.

கே. மதுசனா - 141, வை. மதுசாயினி - 125, வை. மிருனானன் - 113, என். லக்சிகா - 148, ரி. சிந்துஜா - 123, ஆர். பிரிருந்திரா - 124, கே. மதுசன் - 127, எஸ். சாரங்கன் - 123, டி. கரணி - 123, ரி. சங்கவி - 133, கே. பிரணவி - 129, எஸ். சாதுரிக்கா - 155, கே. சாதுரியன் - 113, டி.டிலக்சன் - 131, எம். மதுசன் -113, ரி. பிரதீபா - 116, வை. டிகாஷ்சன் - 129, **பி. அபிநயா - 160 - 9**, கே. கஸ்தூரி - 148, ஜெ. தனுசன் - 123, **பி. கீர்த்திகன் - 175 - 1**, ஏ. அன்குசன் - 125, ஜெ. சர்மினி - 123, கே. கீர்த்தனா - 141, ஐ.டிலோஜன் - 126, ஜெ. நிரைநேயன் - 114.

கே. ஜனனி - 123, எஸ். தவரூபிகா - 113, ஈ. லக்சிகன் - 117, எஸ். லாவன்யா - 118, எஸ். பிருத்திகா - 111, கே. கனியமுதன் - 121, ஜெ. கிருபவன் - 127, வை. சயந்தனா - 114, ஏ. ரகீ பன் - 133, எம். அஜித்குமார் - 116, ஜெ. ஜெனு சியா - 129, கே. குழலினி - 151, பி. தமிழினி - 135, எல். நிலக்சனா - 151, பி. பகீரதன் - 118.

**கிளி. இந்துக் கல்லூரி**

எஸ். அக்சனா - 118, ஏ. பகீரதன் - 117.

**கரியாலை நாகவடுவான் இல. 03 அ.த.க. வித்தி**

ஏ. அகிம்சன் - 132, எம். சோமிலன் - 116, வி. விஸ்ணுகாந்தி - 116.

**கண்ணகை அம்மன் வித்தி**

கே. அன்சியா ஜெய்சி - 140, ரி. நிலானி - 140, பி. விஜினா - 114.

**கண்ணகிபுரம் அ.த.க. பாடசாலை**

ஏ. மரினா றொசாந்தினி - 119, எஸ். சிவகாந்தன் - 120, எம். ரஜித்தா - 122.

**கண்டாவளை மகா வித்தி**

**ஜெ. நிலவன் - 162 - 5**, ரி. செந்துரன் - 111, பி. கௌசல்யா - 130.

**கனகபுரம் மகா வித்தி**

ஏ. சொக்கு - 113, ரி. லெம்பேட் - 125, எம். பேபி கீர்த்திகா - 127, ஜெ. சிவசங்கரன் - 137, ஏ. கயுடி மக்சலா - 129, எஸ். பெனார்டோ - 136, எஸ். டிசானி - 131, என். பிரசாயினி - 124.

**கனகாம்பிகைக்குளம் மகா வித்தி**

ஜி. சுகந்தி - 143, ஆர். துவாரகா - 119.

**கலவிட்டித்திடல் நாகேஸ்வர் வித்தி**

வி. விபூசனன் - 123.

**ஜெயபுரம் அ.த.க. பாடசாலை**

எம். தேனுஜன் - 114, வி. தர்சனா - 152, எஸ். சிந்துஜன் - 130, என். கஜேந்திரகுமார் - 139.

**இயக்கச்சி அ.த.க. பாடசா்லை**

கே. துஸ்யந்தன் - 127, எம். பானுஜன் - 156, ரி. செந்தீபன் - 122, ஆர். பிரசாந்தினி, - 118, ரி. சிந்துஜன் - 143, என். துவாரகா - 130.

**பாரதி வித்தியாலயம்**

என். நிசாந்தன் - 113, கே. டினோசிகா - 145, ஜி. பவித்தா - 122, ஜெ. ஜெனார்த்தனி - 120, வி. ஜெனார்த்தனா் - 113, என். ஜெலிஸ்ரீனா - 115.

**ஆனை விழுந்தான் குளம் அ.த.க. பாடசாலை**

ரி. விவேதி - 126, பி. சுகந்தன் - 134.

**அக்கராஜன் மகா வித்தி**

பி. பார்த்தீபன் - 132, ரி. றொபின்சியா - 117, வி. கஜனி - 144, ஆர். கமகரி - 127, பி. மயூரிகா - 132, எஸ். நிருசா - 118, கே. வேனுஜா - 130, வி. பகிராஜ் - 121, **ஆர். சசிப்பிரியங்கனா - 162 - 5**

**அக்கராயன் அ.த.க. பாடசாலை**

எல். புவிசன் - 113, **ஜெ. கஜானி - 168 - 2**, ஜெ. கம்சாயினி - 132.

**கிளி. மத்திய கல்லூரி**

பி. நிலவன் - 116, வை. பகிர்தன் - 114, ரி. பவித்ரா - 119, எஸ். பவிச்சா - 112, ரி. டிலக்ஷனா - 135, என். லக்சிகா - 118, கே. பிரதீப் - 119, ஆர். ரோகினி - 112, எஸ். தூயவன் - 114, எஸ். டிலக்ஷன் - 111, எம். விஜிந்திரன் - 113, ஏ. விதுசன் - 138, எஸ். வைஸ்ணவி - 116, எஸ். மேதினி - 113, யு. யதுசா - 136, எம். கயல்விழி - 117, கே. பிரணவன் - 134, பி. ரிவேக்ஷன் - 115, என். கம்சா - 123, ஆர். சுகன்ஜா - 131, பி. கபிலா - 113, ரி. உஷா - 157, ரி. அலைமகள் - 131, என். கங்கை - 118, எஸ். பார்த்தீபன் - 111.

### யாழ்ப்பாணம்

**கேவில் அ.த.க. பாடசாலை**

**ஏ. கஜோதன் - 127 - 2, கே. நிதுசா - 111- 8, ரி. தேனுசா - 112 - 7.**

**கொட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை**

**வி. அஸ்வின் - 114 - 6, எஸ். விஜய் - 126 - 3, வை. பிறின்சிகா - 126 - 3.**

**வெத்திலைக்கேணி றோ.க.த.க. பாடசாலை**

**எம். நாகசுதர்சன் -116 -5**

**ஆளியவளை சி.சி.த.க. பாடசாலை**

**பி. பகிஷன் - 135 -1.**

(முற்றும்)

## இலங்கையின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சர்வதேச நீதிமன்றங்கள் அவசியமில்லை



(கொழும்பு)

இலங்கையின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள சர்வதேச நீதி மன்றங்கள் மற்றும் குழுக்கள் அவசியமில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர் இலங்கைக்கென்று சட்ட நியதிகள் உள்ளதாகவும் எனவே தமது பிரச்சினைகளை இலங்கை தாமே தீர்த்துக் கொள்ளும் தன்மையை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்காக சர்வதேச நீதிமன்றங்களை நாட வேண்டிய அவசியம் இல்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் போர் குற்றங்கள் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற அழுத்தங்கள் எழுந்துள்ள நிலையிலேயே ஜனாதிபதி இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

நாட்டுக்கு எதிராக அழுத்தங்கள் வரும்

**ஜனாதிபதி மஹிந்த**

போது அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஓ-4)

## கிராண்ட்பாஸ் பகுதியில் 3 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் 3 சந்தேக நபர்களை கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் வைத்து விசேட பொலிஸ் பிரிவு கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## பாதுகாப்பு செயலர் கோத்தபாய ஏற்கனவே அமெ. அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டிருந்தார்

## விமல் வீரவன்ச தகவல்

(கொழும்பு)



இந்த வருடம் ஐ.நா. சபை அமர்வுக்காக இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சென்றிருந்த வேளை அமெரிக்க குடிவரவுத்துறை அதிகாரிகள் அவரை சுமார் ஒரு மணித்தியாலமாக் விசாரணைக்கு உட்படுத்தியிருந்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தில் ஐக்கிய நாடுகள் அமர்வுக்காக சென்றிருந்த இலங்கைக் குழுவில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவும் உள்ளடங்கியிருந்தார்.

இந்த நிலையில் அமெரிக்காவுக்கு சென்ற பின்னர் அமெரிக்க குடிவரவு அதிகாரிகள் கோத்தபாயவை சுமார் ஒரு மணித்தியாலமாக விசாரணை செய்துள்ளனர்.

எனினும், இந்த விடயம் அந்த வேளையில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை என விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக மனித உரிமை மீறல் குறித்து விசாரணை செய்ய அமெரிக்காவுக்கு எவ்வித உரிமைகளும் இல்லை என தெரிவித்துள்ள விமல் வீரவன்ச வெளிநாட்டு சக்திகள், இலங்கையின் இராணுவ வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர்களுக்கு எதிராகச் செயற்படுகின்றன என்றும் குற்றம் சுமத்தியுள்ளார். (ஓ-4)

ஓர் இனத்தின் நாகரிக வளர்ச்சியை திறந்து பார்க்கும் தங்கச்சாவியே அருங்கலை பொருட்கள்.

-ஓர் அறிஞர்

வலம்புரி

## அருங்கலைப் பொருட்களைப் பாதுகாக்கும் நடவடிக்கை அவசியம்

ஏ-9 பாதை திறக்கப்பட்டுவிட்டது. தரைவழியாக பயணம் செய்ய முடியும் என்ற நிம்மதிக்கு அப்பால் ஏ-9 பாதை திறக்கப்பட்டதனால் சில பாதகமான சம்பவங்களும் நடைபெறும் வாய்ப்புகள் உண்டு.

அதில் யாழ். குடாநாட்டிலுள்ள அருங்கலை பொக்கிஷங்கள் வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதை முதன்மைபடுத்திக் கூறமுடியும்.

2002ஆம் ஆண்டு ஏ-9 பாதை திறக்கப்பட்டதை தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் மிகப் பழமை வாய்ந்த பொருட்களை வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதில் வியாபாரிகள் சிலர் தீவிரம் காட்டினர்.

எனினும் முகமாலைப் பகுதியிலிருந்த இரு வேறு சோதனைச் சாவடிகளில் இடம்பெற்ற கடுமையான சோதனை நடவடிக்கைகளால் குடாநாட்டின் பெறுமதிவாய்ந்த அருங்கலைப் பொக்கிஷங்கள் காப்பாற்றப்பட்டன.

அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள இந்து ஆலய விக்கிரகங்கள் கப்பல் மூலம் கடத்தப்பட்ட சம்பவங்களும் அவற்றில் ஒரு சில விக்கிரகங்கள் மீட்கப்பட்டதும் ஞாபகப்படுத்திக் கொள்ளக்கூடிய நிகழ்வுகள்.

இதில் வரலாற்று சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் விக்கிரகங்களும் கடத்தி செல்லப்பட்டதும் பின்னர் அவை கண்டுபிடிக்கப்பட்டு ஆலய பிரதம குருவிடம் கையளிக்கப்பட்ட சம்பவங்களும் நினைவில் கொள்தற்குரியது.

2002ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைமை மீண்டும் ஏற்பட்டுள்ளது. அப்போது கப்பல் வழியாக அருங்கலைப் பொருட்கள் கடத்தப்பட்டன. ஆனால் இப்போது தரைவழி ஊடாக சர்வ சாதாரணமாக யாழ். குடாநாட்டின் அருங்கலை பொருள்களை குறைந்த விலையில் பெற்று வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான நூறு வீத வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பூர்வீக சின்னங்களான செப்புலோகத்திலான குத்துவிளக்குகள், குடங்கள், கமண்டலங்கள், வகைவகையான தீபங்கள்உட்பட, ஆலயவிக்கிரகங்கள், சுவாமிவீதிவலம் வரும் பழமைவாய்ந்த வாகனங்கள், வீட்டு நிலைக்கதவுகள் என எண்ணரிய அருங்கலை பொருள்கள் எங்களைவிட்டு பிரிகின்றன என்ற செய்தி வெளிவராது இருப்பதும்,

அறிந்தவர்கள் அதுபற்றி கவலை கொள்ளாது காலம் கழிப்பதும் யாழ்ப்பாணத்தவர்கள் ஆவணப்படுத்துவதில் பெரும் அசமந்தம் கொண்டவர்கள் என்பதை உறுதி செய்கின்றது.

எனவே இலக்கிய விழாக்கள் பிரதேச செயலகங்கள் தோறும் கலாசார விழாக் கோலங்கள், கலாசார பேரவைகள், அதற்கான உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணத்தின் அருங்கலை காட்சியகம், யாழ். பல்கலைக்கழகம் என்ற அமைப்புகள் இது விடயத்தில் தலையிட்டு எங்கள் பண்பாட்டில் அடையாளச் சின்னங்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவையும் இனத்தின் பெருமை பேச உதவுபவை என்பதை மறுத்தலாகாது.

# அமெரிக்கா சரத்பொன்சேகாவை சர்வதேச யுத்தக் குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்த சூழ்ச்சி

## விசாரணையை நிராகரிக்க வேண்டும் என்கிறார் விமல்

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை சர்வதேச யுத்தக் குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்துவதற்காகவே ஜெனரல் சரத் பொன்சேகா மீதான விசாரணைகளை நடத்தும் சூழ்ச்சித் திட்டத்தை அமெரிக்கா முன்னெடுத்துள்ளது என தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சாட்டியுள் ளது.

எனவே அமெரிக்காவின் கோரிக்கையை ஜெனரல் சரத் பொன்சேகா நிராகரிக்க வேண்டும் எனவும் இது கிறீன்காா்ட் வதிவிடத்துக்கான விசாரணையை மீறிய செயற்பாடாகவே அமைந்துள்ளது எனவும் அம்முன்னணி தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள தேசிய முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அதன் தலைவரும் எம்.பி.யுமான விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ பிரதிநிதியாகவே ஜெனரல் பொன்சேகா விஜயத்தை மேற்கொண்டார். இவ்விஜயத்தை ஏற்கனவே அமெரிக்காவின் உத்தியோகபூர்வ விஜயமாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் கடையில் அது ரத்துச் செய்யப்பட்டது. எனவே இலங்கை அரசாங்கமே இவ் விஜயத்திற்கான அனைத்துச் செலவுகளையும் செய்கிறது.

இவ்வாறானதோர் சூழ்நிலையிலேயே மனித உரிமைகள் தொடர்பாகவும் எமது பாதுகாப்பு செயலர் தொடர்பாகவும் விசாரணைகளை நடத்த வேண்டும் என அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கு ஜெனரல் சரத் பொன்சேகா எழுத்து மூலம் இணக்கத்தைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சட்டத்தரணிகளுடன் ஆராய்ந்துள்ளார். இச்சம்பவம் நடைபெற்று 48 மணித்தியாலயங்களுக்குப் பின்னரே செயலருக்கு அறிவித்துள்ளார்.

பின்னர் அமெரிக்காவிலுள்ள எமது தூது வருக்கு அறிவிக்கப்பட்டு தற்போது இப்பிரச்சினை தொடர்பாக அங்குள்ள சட்டத்தரணிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

ஜெனரல் சரத் பொன்சேகா ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருப்பதால் இதனைத் தடுக்க சட்டத்தரணிகள் கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கிறீன்காா்ட் வதிவிட விசாரணைகளை நடத்தலாம். ஆனால் எமது நாட்டில் மனித உரிமை மீறல்கள் பாதுகாப்புச் செயலர் தொடர்பான விசாரணைகளை நடத்த அமெரிக்காவுக்கு அதிகாரமில்லை. எனவே இச் சூழ்ச்சித் திட்டத்தில் சிக்கிக் கொள்ளாது விசாரணைகளுக்கு கலந்து கொள்ள முடியாதென நிராகரிக்க வேண்டும்.

விடுதலைப்புலி பயங்கரவாதிகளைப் பயன்படுத்தி எமது நாட்டை சீரழிக்க அமெரிக்காவுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் முடியாமல் போனது.

பயங்கரவாதத்தை ஒழிக்கப் பாடுபட்ட பாதுகாப்புச் செயலாளருக்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகள் தொடர்பாக இதுவரையில் ஐக்கிய தேசியக் கட்சி மௌனம் காத்து வருகின்றது. முடிந்தால் இது குறித்து அறிக்கையொன்றையேனும் வெளியிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# யுத்தத்தில் பலியான படை வீரர்களை அரசாங்கம் மறந்து விட்டது

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் குறிப்பிட்ட ஒரு தாக்குதலில் மாத்திரம் கொல்லப்பட்ட 5 ஆயிரம் படை வீரர்களுக்கும் காயமடைந்த 20 ஆயிரம் வீரர்களுக்கும் அரசாங்கம் கௌரவம் செலுத்தவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

வெற்றியை கொண்டாடும் அரசாங்கம் வெற்றிக்கு காரணமானவர்களை புறம் ஒதுக்கியதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த வெற்றியில் பொதுமக்களும் பாரிய பங்களிப்பை வழங்கியிருந்தனர். எனினும் அரசாங்கம் எந்த திசையில் இருந்தும் அதிகாரத்தையும் செல்வத்தையும் மாத்திரமே எதிர் பார்க்கிறது என ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தற்போது ஒரு கட்டுப்பாடற்ற நிலைமையை நோக்கி நகர்கிறது. இது நமது அதிகாரங்களையும் இறைமைகயையும் இழக்கும் சாத்தி யத்தை ஏற்படுத்தியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் விவசாயிகள் தமது உற்பத்திகளுக் கான நீரினையும் உரத்தினையும் கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்கம் தற்போது வெளிநாடுகளுடன் வாதங்களை முன்வைத்து வருகிறது. இதன் தலைவிதியை இலங்கை மக்களே அனுபவிக்கநேரும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் சர்வதேசத்தின் பல நாடுகளின் பொருளா தாரங்கள் பின் தங்கியிருக்கும் நிலை இருப்பினும் அந்தந்த நாடுகளின் அரசாங்கங்கள் தமது திரவத்தன்மையை அறிந்து செயற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாடே வேலை வாய்ப்பின்றி தடுமாறும் போது அரசாங்கம் தமது குடும்ப சுற்றுலாவுக்காக 180 பில்லியன்களை செலவிட்டுள்ளதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (ஓ-4)

## தகவல் தொழில்நுட்ப மாநாடு

ஈ ஆசியா-2009 தகவல் தொழில் நுட்ப மாநாடு மற்றும் கண்காட்சி என்பன டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை கொழும்பில் இடம் பெறவுள்ளது. 5 பிரதான தலைப்புகளின் கீழ் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் உள்நாட்டு வெளிநாட்டு புத்திஜீவிகள் உட்பட சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

ஆசியாவின் பாரிய முன்னணி தகவல் தொழில் நுட்ப மாநாட்டை இலங்கையில் நடத்துவதன் மூலம் பயங்கரவாதத்தை தோற்கடித்ததன் பின்னர் உத்வேகத்துடன் முன்னோக்கிச் செல்லும் இலங்கை தொடர்பில் சிறப்பான செய்தியை உலகிற்கு எடுத்துச் செல்லும் சந்தர்ப்பம் இதன் மூலம் ஏற்படும் என்று ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஐ.எஸ்.கே.மகாநாம தெரிவித்துள்ளார்.

அதே போன்று பிராந்திய ரீதியில் இலங்கை தொடர்பில் நிலவி வரும் தவறான எண்ணங்களை நீக்குவதற்கு இது உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த மாநாடு மற்றும் கண்காட்சி தொடர்பில் அரச மற்றும் பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் விரிவான வேலைத்திட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(வடமராட்சி)

இலங்கைத் தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் யாழ். கிளை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வடபிராந்திய நிர்மாணிகள் சங்கத்திற்கு புதிய நிர்வாகத் தெரிவு நடைபெற்றது.

இதில் தலைவராக எம்.ராமதாஸ் உப தலைவர்களாக எஸ்.சுந்தரலிங்கம், எஸ்.பாலசுந்தரம், செயலாளராக எஸ்.மணிராஜா, உப செயலாளராக எஸ்.கமலநாதன், பொருளாளராக எஸ்.சஜீபன் மற்றும் உறுப்பினர்களாக எம்.கே. யோகரட்ணம், ஏ.ராஜசேகரன், நா.ஜெயகாந்தராசா, பா.பிரதீபன், எஸ்.சிவசுஜீதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும் மேற்படி நிர்மாணிகள் சங்கத்தில் இதுவரை பதிவு செய்யாத இட்ராட் பதிவுப்புத்தகம் உள்ள சகல ஒப்பந்தக் காரர்களையும் விரைவாக யாழ். ஆனைப்பந்தியில் இல.175 பருத்தித்துறை, யாழ். வீதியில் அமைந்துள்ள சங்கக் காரியாலயத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு செயலாளர் எஸ்.மணிராஜா தெரிவித்துள்ளார். (ஓ-10)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



உனது எதிர்காலத்தை நீயே உருவாக்கு. ஏற்கனவே நடந்து முடிந்ததைக் குறித்து வருந்தாதே. எல்லையற்ற எதிர்காலம் உன்முன்னால் விரிந்து பரந்திருக்கிறது. உன்னுடைய ஒவ்வொரு சொல்லும், சிந்தனையும் செயலும் அதற்கு ஏற்ற பலனைத் தரும் வகையில் உன்மனதில் இடம் பெறும் என்பதை எப்போதும் நீ நினைவில் வைக்க வேண்டும். உனது தீய எண்ணங்களும் செயல்களும் புலிகளைப் போல் உன்மீது பாய்வதற்குத் தயாராக இருக்கின்றன. அதைப் போலவே உனது நல்ல எண்ணங்களும் செயல்களும் ஒரு நூறாயிரம் தேவதைகளின் ஆற்றலுடன் உன்னை எப்போதும் நிரந்தரமாகப் பாதுகாப்பதற்குத் தயாராக இருக்கின்றன என்றும் ஊக்கம் தரும் நம்பிக்கையும் இருக்கிறது. இதை நீ எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

# விஜய நகரப் பேரரசு

43

பேராசிரியர்
**க.அ.நீலகண்டசாஸ்திரிகள்**

ஆனால் யாச்சமன் ஜக்கராஜனை எதிர்த்து நின்று தன் கட்சிக்குத் துணை தேடத் தொடங்கினான். ஒரு வண்ணானுடைய உதவியால் அவன் சீரங்கனுடைய இரண்டாம் மகன் இராமனை சிறையில் இருந்து கள்ளத் தனமாக கடத்திக்கொண்டு வந்தான். சுரங்கம் ஒன்றின் வழியாக சீரங்கனை கடத்திக் கொண்டு வருவதற்காக அவன் செய்த முயற்சி தோற்றது. அதன் பின் சீரங்கன் மேலும் கடுமையான காவலில் வைக்கப்பட்டான். ஜக்கராயன் இல்லாத நேரத்தில் வேலூர் கோட்டையில் இருந்த காவலர்களை கொலை செய்து விடுமாறு கோட்டைத் தலைவனாய் இருந்த இதிஒபலேசனை ஜாச்சமன் தூண்டி விட்டான். அவனும் அவ்வாறே செய்தான். காவலர்கள் கொலை யுண்ட செய்தியைக் கேட்டவுடன் ஜாச்சமன் வந்து கோட்டையைக் கைப்பற்றிக்கொள்வது என்பது அவர்கள் செய்து கொண்ட ஏற்பாடாக இருந்தது. ஆனால் அந்தச் செய்தியை முதலில் கேள்விப்பட்ட ஜக்கராயன் வேலூருக்கு வேகமாக திரும்பி வந்தான். அதனால் ஜாச்சமனுடைய திட்டம் நிறைவேறவில்லை. அதன் பின் சீரங்கனையும் அவனுடைய குடும்பத்தினர் அனைவரையும் கொன்று விடுவது தான் சூழ்ச்சிகளைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி என்று நினைத்த ஜக்கராயன் அவ்வாறே செய்து விட்டான்.

சீரங்கன் பட்டத்திற்கு வந்து அப்போது நான்கு மாதங்களே ஆகியிருந்தன. அந்தப் படுகொலையைக் கேள்விப்பட்ட மக்கள் பேரதிர்ச்சியும் வெறுப்பும் அடைந்தார்கள். அதனால் அவர்கள் ஜக்கராஜனையும் அவனுடைய துணைவர்களையும் மிகப் பெரிதும் வெறுத்தார்கள். சீரங்கனுடைய குடும்பத்தில் தப்பிப் பிழைத்தவன் ராமதேவன் ஒருவன் தான். மக்கள் அவனிடம் மிகுந்த பரிவு காட்டினார்கள். தன்னுடைய முன் எச்சரிக்கையான நடவடிக்கைகளால் இராமதேவனுடைய உயிரை காத்த ஜாச்சமன் அவனையே அரசன் என்று விளம்பரப் படுத்தினான். அதன் பின் ஒரு நீண்ட உள் நாட்டுப் போர் தொடங்கியது. அது பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் தொடங்கியது. ஜாச்சமன் ஒரு சண்டையில் ஜக்கராயனை தோல்வியுறச் செய்தான். அதனால் அவன் நாட்டை விட்டு காட்டுக்கு ஓடிப்போனான்.

நெல்லூர் மாவட்டத்தில் வட மேற்குப் பகுதியில் அவனுக்குச் சொந்தமாக இருந்த கொப்பூரி நிலங்களையும் சொல்வங்களை யும் ஜாச்சமன் கைப்பற்றிக்கொண்டான்.

ஆனால் ஜக்சன் சளைக்கவில்லை. மதுரை நாயக்கன் முத்துவீரப்பன் செஞ்சி நாயக்கன் கிருஸ்ணப்பன் ஆகியவர்களின் துணையுடன் மீண்டும் ஜாச்சமனை எதிர்த் தான். ஜாச்சமன் தஞ்சாவூருக்குச் சென்று ரகுநாத நாயக்கனுடைய துணையைப் பெற்றான். ஜக்கராஜனும் அவர்களுடைய துணைவர்களும் தங்கள் படைகளுடன் திருச்சிக்கு அருகில் திரண்டார்கள்.

ஜாச்சமன் வேலூரில் இருந்து தன்னுடைய படையை நடத்திச் சென்றான். வழியில் ரகுநாதநாயக்கன் அவனுடன் சேர்ந்து கொண்டான் கல்லணைக் கருகில் உள்ள தோப்பூர் என்னும் இடத்தில் இரு திறத்தாரும் கைகலந்தனர். ஜக்கராயனும் அவனுடைய துணைவர் பலரும் சண்டையில் உயிரிழந்தார்கள். அவனுடைய படைகள் சிதறி ஓடினர். ஜாச்சமன் முழு வெற்றி பெற்றான். (1616) இத்தனைத் தொல்லைகளுக்கும் காரணமாய் இருந்த வேங்கடனுடைய மகன் சிறை பிடிக்கப்பட்டான். கிருஸ்ணப்ப நாயக்கன் செஞ்சியைத் தவிர ஏனைய கோட்டைகளை இழந்தான். அவற்றை மீட்பதற்காக அவன் செய்த முயற்சி இன்னுமொரு தோல்வியில் முடிந்தது. அவனும் சிறைப்பட்டான். ஆனால் அதனுடன் உள் நாட்டுப்போர் முடியவில்லை. ஜாக்கராயனுடைய தம்பி எதிராயன் முயற்சியும் பிரபுக்களுள் ஏற்பட்ட பூசலும் போர் நீடிப் பதற்கு காரணமாயின.

இறுதியில் 1619இல் வேங்கடனுடைய மகன் இறந்தான். அதன் பின் இராமதேவன் எதிராயனுடன் சமாதானம் செய்துகொண்டு அவனுடைய மகளையும் மணந்து கொண்டான். அதனால் ராமதேவன் கார்நாடகத்தின் அரசன் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டான்.

ஆனால் மதுரை நாயக்கன் அவனுடைய மேலாதிக் கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. எதிராயன் தன் மரும கனுக்கு முழு ஆதர வும் தந்தான். அது போலவே ரகுநாத நாயக்கனும் அவனுக்குத் தன்னுடைய ஆதரவைத் தந்து விடாப்பிடியாக அவனை எதிர்த்த தலைவர்கள் அனைவரையும் அடக்கிப் பேரரசின் மேலாதிக் கத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தான்.

ஆனால் ராமதேவன் எதிராஜனுடன் சமாதானம் செய்து கொண்டது ஜாச்சம னுக்குப் பிடிக்கவில்லை. எதிராஜனுக்குச் சொந்தமானதும் பழவேற்காட்டை உள்ளடக்கியதுமான கொப்பூரி நாடு முழுவதையும் கைப்பற்றிக் கொள்வதற்கு ஜாச்சமன் திட்டமிட்டிருந்தான். ஆங்காங்கே நடந்த பல சண்டைகளுக்குப் பின் பேரரசின் எஞ்சியிருந்த பகுதிகளில் ராமதேவனுடைய மேலாதிக்கம் 1629ஆம் ஆண்டுக்குள் ஒருவாறு ஏற்றுக்கொள்ளப் பட்டது.

செஞ்சி நாயக்கனும் தன்னுடைய பகையை மறந்து ராமதேவனுடைய மேலா திக்கத்தை ஏற்றுக்கொண்டு அவனுடைய நண்பனானான். ஜாச்சமனுடைய துணைவர் களும் அடக்கப்பட்டார்கள். பழவேற்காடும் அதற்கருகில் இருந்த பகுதிகளும் மீண்டும் எதிராஜன் உடைமையாகி பேரரசின் எல்லைக்குள் வந்தன. இவ்வாறு 15 ஆண்டுகள் நடந்த பூசல்களுக்குப் பின் ராமதேவன் ஓரளவு வெற்றி பெற்றான்.

முன்பு கண்ட உள் நாட்டுப் போர் பிஜப்பூருக்கு நல்ல வாய்ப்பாக முடிந்தது. பிஜப்பூர் சுல்தான் எவ்வளவோ காலமாக மேற்குத் தெலுங்கு நாட்டை கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தான். அந்த ஆசை கடைசியில் நிறை வேறியது. 1619-20 இல் அவன் அப்துல் வஹாப்கான் என்பவன் தலைமையில் ஒரு படையை அனுப்பிக் கர்நூலைத் தாக்கச் செய்தான். கர்நூல் கோட்டைத் தலைவன் கோபாலராஜன் பிஜப் பூர்ப்படைகளை கடுமையாக எதிர்த்தான். அவனுக்கு கோல் கொண்டாவும் துணை புரிந்தது. சண்டையில் தோற்றுப்போன அப்துல் வஹாப்கான் கோபாலராஜனுடன் சமாதானம் செய்து கொண்டு திரும்பிப் போனான் ஆனால் அதனால் நிரந்தர அமைதி ஏற்படவில்லை. அவன் 1624இல் மீண்டும் படை எடுத்து வந்து கர்நூலைத் தாக்கினான். கர்நூலின் அண்மையில் இருந்த நண்பர்கள் கோபாலராஜனுக்கு துணை புரிந்தார்கள். எனினும் பிஜப்பூர் படைகள் வெற்றி பெற்றன. கோபாலராஜன் கோட்டையைக் கைவிட்டு விட்டு ஓடிப்போனான். உள் நாட்டுப் போரினால் தொல்லைக்குட்பட்டிருந்த ராமதேவனால் கோபாலராஜனுக்குத் துணை புரிய முடியவில்லை. மேலும் 28 வயதான ராமதேவன் 1630இல் இறந்து போனான். அதனால் கர்நூல் பிஜப்பூரில் ஆட்சிக்குள் நிரந்தரமாகச் சென்று விட்டது.

ராமதேவனுக்கு மகனுமில்லை ; உடன் பிறந்தாருமில்லை. எனவே, அவன் 1565 ஆம் ஆண்டில் தலைக்கோட்டைச் சண்டையில் உயிர் துறந்த ராமராயனுடைய பேரன் பெத்த வேங்கடனைத் தனக்குப் பின் அரசனென்று நியமித்திருந்தான். ஆனால் ,ராமதேவனு டைய பெரியப்பன் திம்மராஜன் அரசுரிமை தனக்கே சேரவேண்டுமென்று கூறி ஆட்சியைக் கைப் பற்றிக்கொண்டான். அதனால் ,மூன்றாம் வேங்கடன் தன் சொந்த ஊரான ஆன கொண்டியை விட்டு வெளியே வரமுடிய வில்லை. செஞ் சியும், தஞ்சாவூரும், மதுரையும் வேங் கடனை ஆதரித்தன. திம்மனுக்கு யாரும் துணை செய்ய வில்லை. அவன் அடாவழியில் அரசுரிமையைப் பதித்துக்கொண்டவன் என்று மக்கள் பொதுவாகக் கருதினார்கள். அப்படியிருந்தும் ராஜ்யத்துக்கு அவனால் தொல்லை ஏற்படத்தான் செய்தது. அதனால் தோன்றிய உள் நாட்டுப்போர் 1635 இல் அவன் இறக்கும் வரையிலும் நடந்தது. தொடக்கத்தில் திம்மன் சில வெற்றிகளைப் பெற்றான்.

(தொடரும்)

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

# நாளுக்கு நாள் தொடரும் பொலிஸாரின் அராஜகங்கள்; தடுக்காவிடின் நாட்டில் கொலை கலாசாரம் தலைதூக்கும்

## எம்.பி. திஸாநாயக்கா கருத்து

(கொழும்பு)

பொதுமக்கள் முன்னிலையில் பட்டப் பகலில் இளைஞர் ஒருவர் அடித்துக்கொல்லப்பட்டமை பொலிஸ் அராஜகத்தின் உச்சக் கட்டம் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் இலங்கை கொலை கார நாடாக மாறிவிடும் என்று ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவருமான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்டது தமிழ் இளைஞன் என்பதால் நியாயமான விசாரணைகள் நடைபெறுவதென்பது சந்தேகமான விடயம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பம்பலப்பிட்டி கடற்கரையில் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டு கடலில் தள்ளிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே எஸ்.பி.திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில்,

நாளுக்கு நாள் பொலிஸாரின் அராஜகங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. அங்குலாணையில் இரு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டனர். அதற்கு முன்பும் பல சம்பவங்கள் இடம்பெற்றன..

இன்று மன நோயாளியான இளைஞர் ஒருவர் கையெடுத்து கும்பிட்ட போதும் ஈவிரக்கமின்றி பொதுமக்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் மிலேச்சத்தனமாக தாக்கப்பட்டு கடலில் தள்ளிக்கொல்லப்பட்டுள்ளார்.

எனவே இக் கொலை தொடர்பாக நீதியான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் கொல்லப்பட்டது தமிழ் இளைஞன் என்பதால் நீதியான விசாரணைகள் நடத்தப்படுமா என்பது சந்தேகமே . ஆனால் இதற்கு இடமளிக்கலாகாது. அனைவரும் அநீதிக்குஎதிராகக்குரல்கொடுக்கவேண்டும்.

அமைச்சர்கள் தமது தவறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பொலிஸாரைப் பயன்படுத்துகின்றனர். இதனால் குற்றமிழைக்கும் பொலிஸாரைப் பாதுகாக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

பொலிஸார் சிலர் அரசாங்கத்திற்கு சார்பாக செயற்படுகின்றனர். இதனால் அவர்கள் குற்றமிழைக்கும் பட்சத்தில் பாதுகாக்கப்படுகின்றனர்.

இதன் காரணமாக எந்தப் பயமுமின்றி கொலைகள் தாக்குதல்கள் என்பன பட்டப்பகலில் அதுவும் பொதுமக்கள் முன்னிலையில் இடம்பெறுகின்றன.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் நாடு முழுவதும் கொலைக் கலாசாரம் தலை தூக்கும். அதன் பின்னர் நாட்டில் ஒழுக்கமுள்ள நீதியான சமூகத்தை கட்டியெழுப்ப முடியாது போகும் என்றார். (ஓ-6)

## எதிர்க்கட்சிக் கூட்டமைப்பில் பல கட்சிகள் கைச்சாத்திட்டுள்ளன

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையில் உருவாக்கப்படும் எதிர்க் கட்சி கூட்டமைப்பில் பல கட்சிகள் கைச்சாத்திட்டுள்ளன. பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற விசேட வைபவம் ஒன்றில் இக்கட்சிகள் கைச்சாத்திட்டுள் ளன. இந்த புதிய கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணி என பெயரிடப்பட்டுள்ளது. இந்த முன்னணியில்எதிர்க்கட்சி மற்றும் ஐ.தே. க தலைவர் ரணில் விக்ரம சிங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத்தலைவர் மங்கள சமரவீர, ஸ்ரீலங்கமுஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் உட்பட 12 கட்சிகளின் பிரதி நிதிகளும் தேசிய புத்திஜீவிகள் சபையின் பிரதி நிதி ஒருவரும் கைச்சாத்திட்டனர். (ஓ-4)

## வடக்கு கிழக்கில் 3 இலட்சம் வீடுகள் யுத்தத்தினால் நிர் மூலமாக்கப்பட்டும் சேதமடைந்துமுள்ளன

(கொழும்பு)

யுத்தத்தினால் நிர்மூலமாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வீடுகளை மீண்டும் நிர்மாணித்தல் புனரமைத்தல் பணிகள் வெற்றிகரமாக இடம் பெற்று வருவதாக தேசத்தை கட்டி எழுப்பும் அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறுநிர்மூலமாக்கப்பட்ட மற்றும் சேதமாக்கப்பட்ட 3இலட்சம் வீடுகள் காணப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பனவற்றின் உதவியின் மூலம் 53 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றுள் 33 ஆயிரம் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார். ஏனைய வீடுகளை கட்டும் பணி அடுத்த வருடம் நிறைவு செய்யப்படும்.

புதிய வீடு ஒன்றைக்கட்ட 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவிடப்படுவதோடு சேதமடைந்த வீட்டைப் புனரமைக்க ஒரு இலட்சரூபா பெறுமதியான நிதி வீட்டு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிளுக்காக 19 இயந்திரங்கள் பயன்படுத்தப் படுவதாக தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சு தெரிவித்துள்ளது. எதிர்வரும் சனிக்கிழமை மேலும் 5 இயந்திரங்கள் இலங்கைக்கு கிடைக்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஓ-4)

# யாழ்ப்பாணம், மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக் கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2010

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2010-ம் திகதி முதல் 31.12.2010-ம் திகதி வரையான காலப் பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

**கேள்விப் படிவக் கட்டணம் - ரூ.400.00**
**(வற் வரி நீங்கலாக)**
**கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி- 05.11.2009**
**கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் - 20.11.2009,நண்பகல்12 மணிவரை**
**கேள்வி திறத்தல் - 20.11.2009,பிற்பகல் 2.30 மணிக்கு**

விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 20.11.2009-ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

குறிப்பு:-

01. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் 50 வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.
02. சந்தையை குத்தகைக்குப் பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியில் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) ரூபா 40.00 பெறலாம். மேலதிகமாக எந்தவிதக் கட்டணங்களும் அறவிடக் கூடாது.
03. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச் சக்கரவண்டிகளுக்கு ரூபா 4.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7.00 உம் வாங்கலாம். மேலதிகமாக எந்த வரியும் அறிவிடக்கூடாது.
04. சபையின் கடைகளில் இறைச்சி/கருவாடு/கோழி ஆகிய பொருள்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் மாத வாடகை செலுத்த வேண்டும்.
05. சபையின் கடைகள் இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதி, ஜின்னா வீதி, பாசையூர் ஆகிய பகுதிகளுக்குக் கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடங்களின் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதங்களையும் இணைத்தல் வேண்டும்.
06. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரி (வற்) உடன் தேசத்தைக் கட்டிஎழுப்பும் வரி 3% உம் செலுத்துதல் வேண்டும்.
07. சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை 2010 தை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி செலுத்துதல் வேண்டும்.
08. கேள்வி விண்ணப்பப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகர சபை ஆணையாளராகிய எனக்கு இருக்கின்றது.
10. கேள்விப் படிவங்கள் பெறுபவர்கள் முன்பு மாநகர சபைக்கு எந்தவிதக் கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

மேலும் மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

**மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்.**
**03.11.2009**

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

| தொ. இல. | பொதுச் சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும், 3% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|
| 01. | பண்ணை மீன் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 3675000.00 |
| 02. | பெரியகடை மரக்கறிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 1575000.00 |
| 03. | குருநகர் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 1050000.00 |
| 04. | செங்குந்தா சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 630000.00 |
| 05. | நாவாந்துறை சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 475000.00 |
| 06. | புங்கக்குளம் சந்தை | 2000.00 | 10500.00 |
| 07. | அரியாலைச் சந்தை | 1000.00 | 105000.00 |
| 08. | கச்சேரி நல்லூர் வீதி துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் (இல.11/2, சுண்டுக்குளி தபால் கந்தோருக்கு அருகில்) | 1000.00 | 105000.00 |
| 09. | பாசையூர் சந்தை | 2000.00 | 100000.00 |
| 10. | கஸ்தூரியார் வீதி துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 1000.00 | 100000.00 |
| 11. | பண்ணை மீன் சந்தைக்கு அருகாமையில் உள்ள சிற்றுண்டிச்சாலை | 1000.00 | 52500.00 |

| தொ. இல. | இறைச்சிக் கடைகள் | கடை இல. | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும்; 3% தே.க.எ. வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01. | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 94500.00 |
| 02. | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 84000.00 |
| 03. | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.04 | 5000.00 | 120750.00 |
| 04. | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.05 | 5000.00 | 52500.00 |
| 05. | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.06 | 5000.00 | 52500.00 |
| 06. | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.08 | 5000.00 | 42000.00 |
| 07. | பண்ணை கருவாட்டுக் கடை | இல.02 | 5000.00 | 31500.00 |
| 08. | பண்ணை கோழிக் கடை | இல.07 | 5000.00 | 42000.00 |
| 09. | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 94500.00 |
| 10. | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 140000.00 |
| 11. | அரியாலை மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 105000.00 |
| 12. | அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 21000.00 |
| 13. | புங்கக்குளம் மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 115500.00 |
| 14. | புங்கக்குளம் ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 52500.00 |
| 15. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 89500.00 |
| 16. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 110000.00 |
| 17. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.03 | 5000.00 | 68250.00 |
| 18. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.04 | 5000.00 | 70000.00 |
| 19. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.05 | 5000.00 | 55500.00 |
| 20. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.06 | 5000.00 | 70000.00 |
| 21. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.07 | 5000.00 | 70000.00 |
| 22. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.08 | 5000.00 | 70000.00 |
| 23. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.09 | 5000.00 | 70000.00 |
| 24. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.10 | 5000.00 | 10000.00 |
| 25. | நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல.11 | 2000.00 | 10000.00 |
| 26. | நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல.12 | 2000.00 | 10000.00 |
| 27. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 7000.00 | 136500.00 |
| 28. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.02 | 7000.00 | 136500.00 |
| 29. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.03 | 7000.00 | 136500.00 |
| 30. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.04 | 7000.00 | 136500.00 |
| 31. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.05 | 7000.00 | 136500.00 |
| 32. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.06 | 7000.00 | 136500.00 |
| 33. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.07 | 7000.00 | 105000.00 |
| 34. | நரிக்குன்று மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 7000.00 | 90000.00 |
| 35. | பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 89500.00 |
| 36. | பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 89000.00 |
| 37. | முஸ்லிம்கல்லூரி ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 27000.00 |
| 38. | ஜின்னா வீதி ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 2500.00 | 27000.00 |

3644

## நேற்றுவரை 50ஆயிரத்து 669...

நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர். இதில் முதல் கட்டமாக நேற்று மாலை 509 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 675 பேரும் இரண்டாம் கட்டமாக நேற்றிரவு 600 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 952பேரும் யாழ். துரையப்பா விளையாட் டரங்கிற்கு அழைத்துவரப்பட்டனர்.

அவர்கள் யாழ். துரையப்பா விளையாட் டரங்கில் வைத்து பிரதேச செயலக அலுவலர்களினாலும் படையினராலும் குடும்பப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு அழைத்துவரப்பட்ட மக்கள் உடுவில், சாவகச்சேரி, நல்லூர் மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள். இம் மக்களின் நிலைமைகள் தொடர்பில் நேரில் வந்து ஆராய்ந்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா 5 ஆயிரம் ரூபாய் நிதியுத வியும் கையளித்தார். வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 15 ஆயிரத்து 55 குடும்பங்களைச் சேர்ந்த 50 ஆயிரத்து 669 பேர் நேற்று வரை யாழ்ப்பாணத் திற்கு அழைத்துவரப்பட் டனர்.

இந்நிலையில் வவுனியா நலன்புரி முகாம்களில் யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 7 ஆயிரம் பேர் வரை இன்னும் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது என யாழ். அரச அதிபர் க.கணேஷ் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்றைய மக்கள் மீள்குடியமர்த்தல் நடவடிக்கையின் போது யாழ். அரச அதிபர் க.கணேஷ், யாழ். மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் எம்.பிரதீபன் மற்றும் பிரதேச செயலாளர்கள் நேரில் சென்று நடவடிக்கைகளைமுன்னெடுத்தனர் (ச-5)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நால்...

ஆரம்பித்திருந்தனர்.

2007ஆம் 2008ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் அவுஸ்திரேலியாவிலும் பொங்குதமிழ் வைபவங்களில் இலங்கை அரசுக்கும் பாதுகாப்பு படைக்கும் அவதூறு ஏற்படுத்தும் வகையில் உரை நிகழ்த்தியதாக இவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அரசியல் அமைப்பின் சரத்துகளுக்கு முரணான வகையில் குற்றச்சாட்டப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரைகள் நிகழ்த்தியதாக அவர்கள் மீது இரகசியப் பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்திருந்தனர்.

இரகசிய பொலிஸார் நேற்று கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்துக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து மேற்படி உரைகள் நிகழ்த்தியதாக குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வாக்கு மூலங்கள் ஊடாக ஏற்றுக் கொள்கின்ற போதிலும் அதனை நிரூபிக்க போதுமான நேரடி மற்றும் சூழ்நிலை தொடர்பான சான்றுகள் எதுவும் இல்லை என்று பொலிஸார் நீதிமன்றத்துக்கு தெரிவித்தனர்.

இவர்கள் சார்பாக ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா இதுகுறித்து மன்றுக்கு கருத்து தெரிவிக்கையில், மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சுமுக பேச்சுவார்த்தைகள் நடை பெற்ற தருணத்தில் இவ்வாறான உரைகள் நிகழ்த்திய போது இதுகுறித்து அவர்களுக்கு எதிராக பிரதம நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரசட்டப்படியான அதிகாரம் இல்லை என்று தெரிவித்தார்.

மேலும் அரசியல் அமைப்பின் சரத்துக்கள் தொடர்பான வழக்குகள் மேன்முறையீட்டு அல்லது உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட அதிகாரம் இருக்கும் என்றும் தெரிவித்தார். இதனால் தவறான நீதிமன்றத்தில் வழக்கு தொடர பொலிஸ் மா அதிபருக்கு எதுவித உரிமை இல்லை என்றும் தனது சட்டவாதத்தில் கே.வி.தவராசா முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மேற்படி குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்து நீதிமன்றம் தீர்ப்பு செய்தது. (ச-5)

## பயணக் கட்டுப்பாடுகளை நீக்கு...

உண்டுபண்ணுவதை தங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்பு கிறோம். விமான சேவைகள் அறிவித்தலின்றி இரத்து செய்யப்படும் சந்தர்பங்களில் போக்கிடமின்றி பலர் தவித்த நிகழ்வுகள் பல உள்ளன.

ஏ-9, யாழ்ப்பாணம்-கண்டி வீதி திறக்கப்பட்ட பின்பு பாதுகாப்பு அனுமதியுள்ளவர்களுக்கு எவ்வாறு பிரயாணம் செய்வது என்பதை தீர்மானிக்கும் தெரிவுரிமை உண்டு. இந்த தெரிவுரிமையை கட்டுப்படுத்தல் பிரயாண உரிமைக்கான அடிப்படை உரிமையை மறுப்பதற்கு சமமானதாகும்.

எனவே இந்தக்கட்டுப்பாடுகளை நீக்குமாறு தங்களை பணிவுடன் வேண்டுகிறோம் அதேபோல் யாழ்ப்பாணம்-கொழும்பு நேரடி பஸ் போக்குவரத்துக்கான கட்டுப்பாடுகள் அசௌகரியங்களையும், அதிகரித்த செலவையும் தாமதங்களையும் ஏற்படுத்துகின்றன.

தற்போதைய நிலையில் தாம் விரும்பிய நேரத்திலோ அல்லது தேவைகளுக்கேற்பவோ ஒருவர் பிரயாணம் செய்ய முடியாது.

இந்தக்கட்டுப்பாட்டை நீக்குதலும் அதிகரித்த பஸ் சேவைகளில் ஈடுபட அனுமதி வழங்கலும் துரிதமான செலவுச் சிக்கனமான யாழ்ப்பாண-கொழும்பு பிரயாணத்துக்கு வழிவகுக்கும் என்றுள்ளது. (ச)




## எதிர்க் கட்சிகளை உள்ளடக்கிய...

கடந்த ஏப்ரல் மாதப் பகுதியில் இடம் பெற்ற போர் நடவடிக்கையின் போது அரசு, விடுதலைப்புலிகளை தோற்கடித்த நிலையில் இன்னமும் பெரும் செல்வாக்கினை பெற்றுள்ள அரசாங்க கூட்டணியை தோற்கடிப்பதே இவர்களின் எதிர்பார்ப்பாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான இந்தக் கூட்டணியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,ஜனநாயக மக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு, புதிய சிங்கள உறுமய போன்ற 20 கட்சிகளும் அமைப்புக்களும் இடம் பெற்றுள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதே இந்தக் கூட்டணியின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாக இருக்கின்றது. ஜயவர்த்தனபுர நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவு தலைவர் மங்கள சமரவீர, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேஷன் உள்ளிட்ட 20 கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

புதிய கூட்டமைப்பு தொடர்பான உடன்படிக்கையில் இந்தக் கட்சிகளின் தலைவர்கள் கையெழுத் திட்டனர். (ச-5,14)

## இ.போ.ச. மற்றும் காப்பாளர்...

களைப் பெற்றுக் கொள்ளுமாறு மேற்படி நியமனங்களுக்கு விண்ணப்பித்துள்ளவர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

சாரதி நியமனம் தொடர்பில் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்பவர்கள் தங்களது பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ் (8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருந்தல் வேண்டும்) பாடசாலையை விட்டு நீங்கிய சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளர் சான்றிதழ், சாரதி அனுமதிப் பத்திரம் (3 ஆண்டுகள் பழைமைவாய்ந்ததாக இருத்தல் வேண்டும்) என்பனவற்றுடன் விண்ணப்பதாரிகள் 63 அங்குல உயரம் உடையவர்களாகவும் 100 இறாத்தல் பாரமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

காப்பாளர் நியமனம் தொடர்பில் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்பவர்கள் தங்களது பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் (க.பொ.த சாதாரணதர பரீட்சையில் கணிதம், மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்) பாடசாலையை விட்டு நீங்கியசான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளர் சான்றிதழ் என்பவற்றுடன் விண்ணப்ப தாரிகள் 60 அங்குல உயரம் உடையவர்களாகவும் 100 இறாத்தல் பாரமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலதிக தொடர்புகளுக்கு 0212229824 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## போர் குற்றம்...

பொன்சேகா மீதான விசாரணைகளை தாம் வரவேற்பதாக புலம் பெயர் நாடுகளில் உள்ள தமிழ் மக்களின் அமைப்புகள் தெரிவித்தன.

நான் அமெரிக்க பிரஜையாக இருப்பதால் எனது அரசு இலங்கை மீது நீதியான நடவடிக்கை எடுப்பதை நாம் ஊக்குவிக்கின்றோம் என அமெரிக்காவை தளமாகக் கொண்ட மனித நேய அமைப்பின் பிரதிநிதி அஞ்சலி மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஐ.நாவின் உத...

ஏற்று ஜோன் ஹோம்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்வார் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் அவர் அரச உயர்மட்ட தலைவர்கள் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். மேலும் வவுனியா நலன்புரி முகாம்களுக்கு விஜயம் செய்யவுள்ள ஜோன் ஹோம்ஸ் அங்குள்ள நிலைமைகளை பார்வையிடுவார் என அரசாங்கமட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு அரசாங் கம் செய்து கொடுத்துள்ள வசதிகள், மீள்குடியேற்ற வேலைத் திட்டம் மற்றும் நிலக் கண்ணிவெடிஅகற்றும் செயற்பாடுகள் போன்றவற்றை ஜோன் ஹோம்ஸ் பார்வையிடுவார்.

அண்மைக்காலமாக அரசாங்கம் மீள் குடியேற்ற வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தியுள்ளமை தொடர்பில் ஜோன் ஹோம்ஸுக்கு விரிவாக விளக்க மளிக்கப்படும் என்று அரசாங்கதகவல்கள்தெரிவிக்கின்றன. (ச-5)


## வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பை நாடிநிற்கும் துடிப்பான இளைஞர் யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக யாழ்.மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றிவரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரியவாய்ப்பு.

### வேலை பற்றி

- ☆ ஒரு மாத பயிற்சிக் காலத்தை உடையது.
- ☆ இக்காலப் பகுதியில் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.
- ☆ பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
- ☆ பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

### அடிப்படைத் தகைமை

- ☆ G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாட சித்தி.
- ☆ 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (Bio Data) 15.11.2009க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

விளம்பர இல. C-3643
C/o, வலம்புரி
இல.03,02ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(C-3643)





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.